www.tamilarangam.net

# அரசியலும் இராணுவமும்



தீப்பொறி வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமர்ப்பணம்



தோழர் சந்ததியார் (வசந்தன்)

விடுதலை இராணுவத்திற்கு அரசியலின் தேவையை வலியுறுத்தி வந்தவர்.

அந்த போராட்டத்தில் அராஜகவாதிகளினால் படுகொலை செய்யப்பட்டவர்.

இவர் நினைவாக....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 5 | சேவையமைப்பு | சேனையமைப்பு |
| 1 | 9 | வாசகர்களை | வாசகங்களை |
| 5 | 19 | பாதையில் | பாதையில் ஏற்பட்ட |
| 6 | 24 | ரிகொடாமை | வரிகொடாமை |
| 6 | 30 | பின்னால் | பின்னால் |
| 10 | 2 | தேல்வியோ | தோல்வியோ |
| 10 | 8 | மடும் | மட்டும் |
| 11 | 27 | நிர்ப்பந்தி கசிதது | நிர்ப்பந்தித்தது |
| 13 | 9 | தொடுக்கவல்லது | கொடுக்கவல்லது |
| 13 | 16 | புரட்சிகர இராணு வத்திற்கு மிடை யேயுள்ள | புரட்சிகர இராணுவத் திற்கும் அடக்கு முறை இராணுவத் திற்குமிடையே யுள்ள |
| 16 | 17 | தங்களுளையை | தங்களுடைய |
| 19 | 33 | சாரீர | சரீர |
| 24 | 17 | உத்தரவத ப்படுத் தப்படும். | உத்தரவாதப் படுத் தப்படும். |
| 24 | 18 | துன்பங்களை | துன்பங்களை அதி காரிகளும் வீரர்க ளும் சமமாகப் பகிர் ந்து கொள்ளுவதால் |
| 27 | 9 | முன்னெடுக்காது | முன்னெடுக்காது என உணர்ந்து வெளியேற விரும் பும் ஊழியர்களை பலவந்தமாக |
| 27 | 11 | அம்பலமாாது | அம்பலமாகாது |
| 30 | 27 | மறாக | மாறாக |
| 31 | 17 | நாடகளை | நாட்களை |
| 3[illegible] | 26 | இக்கமும் | இயக்கமும் |
| 3[illegible] | 20 | இவ்வியக்கங்களாக மாறும் | இவ்வியக்கங்கள் முழுமையான புரட் சிகர இயக்கங் களாக மாறும் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

- தமிழர்கள் வீரத்தை ஒரு கலையாகவே போற்றி வந்துள்ளார்கள்.
- வீரத்திற்கென்றே ஒரு கடவுளை வைத்து வழிபட்டவர்கள் தமிழர்கள்.
- தமிழ்க் காவியங்கள் யாவும் வீரர்களைப் புகழத்தவறவில்லை
- புறநானூறு தமிழர்களின் யுத்தக் கலைபற்றியும், சேனையமைப்பு முறைகளைப் பற்றியும் கூறியிருக்கிறது.

இவ்வாறு பெருமைப்பட்டுக் கொள்பவர்கள் இன்றும் எம் மத்தியில் இல்லாமலில்லை. ஆண்ட பரம்பரையின் புகழ்பாடும் இந்த வாசகங்களை பரிசீலிக்கும் போது பின்வரும் கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததே.

நிலவுடமை சமூக அமைப்பில் நடந்த இந்த யுத்தங்கள் பரந்துபட்ட மக்களுக்கு என்ன பயனைக் கொண்டுவந்தன?

அரசனைப் புகழும் நோக்கம் கொண்ட புலவர்களின் மிகைப்படுத்தப்பட்ட இந்த காவியங்கள் இன்று எமக்கு வழிகாட்ட வல்லவைதானா?

அம்பு வில் கொண்டு போரிட்ட போர்முறைகள் இன்றைய யுத்தத்தில் வழிகாட்ட வல்லவைதானா?

இந்த கோணத்தில் அணுகும் போது மேலே கூறப்பட்ட கருத்துக்கள் நவீன ஆயுதங்களை ஏந்தி நிற்கும் சிறீலங்கா அரசை புரட்சிகர யுத்தம் மூலம் முகம் கொடுக்க முனையும் தமிழ் மக்களுக்கு ஆண்டபரம்பரையின் புகழ்பாடும் இக்கருத்துக்கள் எந்தப்பயனையும் வழங்க மாட்டாது என்பது தெளிவானது.

தமிழ் சமுதாயம் முதன்முதலாக முகம் கொடுக்கும் புரட்சிகர போராட்டம் தமிழீழ விடுதலைப் போராட்டமேயாகும். இது கருவிகளையும், இராணுவக் கலையையும் முதலாளித்துவ இராணுவத்திடமிருந்து சுவீகரித்துக் கொண்டது போலவே யுத்தம், இராணுவம் பற்றிய கருத்துக்களையும் சுவீகரித்துக்கொண்டது. தமிழ் மககள் மத்தியிலும், விடுதலை இயக்கங்களிலுள்ள போராளிகள் மத்தியிலும் இந்த முதலாளித்துவக் கருத்துக்களே இன்று ஆதிக்கம் செலுத்துகின்றன.

முதலாளித்துவ இராணுவமானது முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவை செய்வதற்காக வடிவமைக்கப்பட்டது. தமது உரிமைகளுக்காகப் போராடும் சுரண்டப்பட்ட வர்க்கங்களிடமிருந்து முதலாளித்துவ வர்க்கத்தை பாதுகாப்பதே இதன் பணியாகும். இந்த பணியை செவ்வனே ஆற்றுதற்கேற்ற கருத்துக்களையே முதலாளித்துவ வர்க்கமானது தனது இராணுவத்திற்கு வகுத்தளித்தது. சுரண்டப்படும், ஒடுக்கப்படும் வர்க்கங்கள் தமது உரிமைக்காக போராட முற்பட்ட போது தமக்கான இராணுவங்களை கட்டியமைத்தது போலவே தமது இராணுவம் பற்றிய கருத்துக்களையும் வகுத்தெடுத்தன.

www.tamilarangam.net

யுத்தத்தின் அரசியல் நோக்கம், இராணுவத்தின் அரசியல் தன்மை பற்றிய கருத்துக்களே அவையாகும்.

புரட்சியாளர்கள் அரசியலும் இராணுவமும் கொண்டுள்ள பரஸ்பரத் தொடர்புகள் பற்றிய பிரச்சனையை என்றோ தீர்த்து விட்ட போதிலும் எமது போராட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சனைகள் தீர்க்கப்படாமலே உள்ளது. தம்மை புரட்சிகர இராணுவம் என அழைத்து கொள்ளும் பல விடுதலை இயக்கங்கள்கூட இராணுவம் பற்றிய முதலாளித்துவ கருத்துக்களையே கொண்டுள்ளன; மக்கள்முன் வைக்கின்றன.

ஒவ்வொரு விடுதலை இயக்கமும் தமது இராணுவத்திலுள்ளவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதனால் தமது பலத்தை அதிகரிக்க முயலுகின்றன. இராணுவத்தின் பலமென்பது அதன் எண்ணிக்கையில் மாத்திரமல்ல அதன் தரத்தையும் உள்ளடக்கியதுதான். தரம் என்னும் போது அது பெற்றுள்ள பயிற்சியும், அதன் ஆயுதத் தளபாடங்களின் தரத்துடன் கூடிய அதன் வீரர்களின் உணர்வுபூர்வமான செயற்பாடு, வீரர்களிடையே காணப்படும் ஒருமைப்பாடு என்பவற்றையும் உள்ளடக்கியதே. அதுவும் விடுதலை இராணுவத்தைப் பொறுத்தவரையில் யுத்தம் நீண்டகாலத்திற்கு நீடிக்கும் போது, ஆயுத தளபாடங்களைப் பொறுத்தவரை எதிரியிலும் பார்க்க தாழ்வான நிலையில் நீண்டகாலம் போரிட நேரும் போது வீரர்களின் உணர்வுபூர்வமான செயற்பாடு, வீரர்களிடையே காணப்படும் ஒருமைப்பாடு என்பன மிகவும் தீர்க்கமான அம்சமாகிவிடுகின்றன. இந்த அம்சங்களை புறக்கணித்துவிட்டு வெறும் எண்ணிக்கையால் பலத்தை கூட்டமுனைவது எம்மத்தியிலுள்ள இராணுவம் பற்றிய தவறான கண்ணோட்டங்களையே காட்டுகின்றன. இத்தவறான கண்ணோட்டமே இன்றைய அனைத்து நெருக்கடிகளினதும் ஊற்று மூலமாகிறது. ஆதலால் தவறான வழிமுறைகளுக்கு எதிராக போராடுவதற்கு முன்பு இத்தவறான கருத்துக்களுக்கு எதிராக போரிடுவது அவசியமாகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று மிக நெருக்கடியான ஒரு கட்டத்தை அடைந்துள்ளது. ஆயுத போராட்டத்தை மேற்கொண்டு வந்த இயக்கங்கள் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. போர் நிறுத்தத்தை பயன்படுத்தி சிறீலங்கா அரசு தன்னை பலப்படுத்தும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. அதேவேளை விடுதலை இயக்கங்களின் அராஜக நடவடிக்கைகளால் அதிருப்தியுற்ற மக்கள் இயக்கங்களுக்கெதிராக நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்கள். இதுவரை காலமும் இயக்கங்களால் நிராகரிக்கப்பட்ட மக்களின் போராட்ட சக்தி இன்று இயக்கங்களுக்கு எதிராகவே திரும்பியுள்ளது. வீதித்தடைகளை அமைத்து சுயமாகவே அவர்கள் போராடும் விதமே மக்கள் சக்தி பற்றிய பழைய அணுகுமுறைகளை நிராகரித்து புதிய நடைமுறைகளை வேண்டி நிற்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று தோன்றியுள்ள மக்களின் இந்த நம்பிக்கையீன நிலை பலர் மத்தியில் தமிழீழத்தின் தேவைபற்றியே கேள்விகளை எழுப்பத் தொடங்கியுள்ளது. இது மிக ஆபத்தான நிலையின் அறிகுறியாகும். தமிழீழ போராட்டமானது தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள யுத்தமாகும். இதில் வெற்றி பெறுவதன் மூலமே தமிழ் சமுதாயம் தனது வருங்காலத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். ஆகவே செய்ய வேண்டிய தெல்லாம் போராட்டத்தில் எழுந்துள்ள தவறான போக்குகளைக் கண்டு போராட்டத்தையே கைவிடுவதல்ல; அக்குறைபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கான பாதைகளைக் கண்டறிந்து இத்தவறான வழிமுறைகளிலிருந்து போராட்டத்தை மீட்டெடுத்து சரியானபாதையில் முன்னேறுவதே ஆகும்.

இன்றுள்ள நிலைமை இன்னும் சில காலத்திற்கு நீடிக்குமாயின் விடுதலை இயக்கங்கள் மக்களால் நிராகரிக்கப்படுவதற்கும் போராட்டம் தோல்வியை நோக்கி இட்டுச் செல்வதற்குமான ஒரு ஆபத்தான நிலையை அடையும். எதிரியின் போர்த்திறனால், நவீன ஆயுதங்களால் தோற்கடிக்கப்படாத ஒரு வீரமிகு போராட்டம் எமது சொந்த அணிகளின் பொறுப்பற்ற, தவறான போக்குகளால் தோல்வியை நோக்கி இட்டுச் செல்லப்படுவது மிகவும் பரிதாபகரமான நிகழ்வாகும். போராளிகளைக் காட்டிக் கொடுப்பது மட்டுமல்ல பொறுப்பற்ற தவறான நடவடிக்கைகளால் போராட்டத்தை தோல்விக்கு இட்டுச் செல்வதும் மக்களுக்கு இழைக்கும் துரோகமேயாகும். ஆதலால் இத்தவறான போக்குகளிலிருந்து மீண்டு சரியான பாதையில் போராட்டத்தை முன்னெடுப்பது மிக அவசர தேவையாகிறது.

இக் கட்டுரையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியல் தன்மை, எமது மக்கள், விடுதலை இயக்கங்கள் மத்தியிலுள்ள போராட்டம் இராணுவம் பற்றிய தவறான கருத்துக்களின் தன்மை அவற்றால் போராட்டத்திலே இன்று ஏற்பட்டுள்ள மோசமான பின்னடைவுகள் போன்றவற்றை ஆராய முற்பட்டுள்ளோம். இதில் எமது விமர்சனங்கள் மட்டுமல்ல ஓரளவு சுயவிமர்சனமும் உள்ளடங்கியே உள்ளது. ஏனெனில் நாமும் இந்த பாதைகளைக் கடந்தே வந்துள்ளோம்.

**ஒரு சமுதாயம் விடுதலை பெறுவதற்கு தகுதியானது என்பதை நிரூபிப்பது அது ஒரு புரட்சிகர தாபனத்தை கொண்டிருப்பதே ஆகும். இன்று எம்முன்னுள்ள நிலைமைகளை ஆய்ந்து படிப்பதும் அவற்றை மாற்றியமைத்து புதிய, புரட்சிகரமான பாதையில் முன்னேறுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.**

— தீப்பொறி —
மார்கழி 10, 1985.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியலும் இராணுவமும்

அரசியலுக்கும் இராணுவத்திற்கும் இடையிலுள்ள பரஸ்பர தொடர்பு பற்றிய பிரச்சனை புரட்சியாளர்கள் மத்தியில் என்றோ தீர்த்து வைக்கப்பட்ட பிரச்சனைதான். ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத் தில் இன்று பூதாகரமாக கிளம்பியிருக்கும் பிரச்சனைகளைப் பார்க்கும் போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரையில் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படாமலே இருப்பது மட்டுமல்லாமல் பல தப்பான கண் ணோட்டங்களையும் கொண்டிருப்பது புலனாகிறது. இந்தப் பிரச்சனையை தமிழீழ யதார்த்த சூழ்நிலையில் தீர்த்துவைப்பது மிக முக்கிய தேவையா கும்.

இங்கு நாம் ஒரு அடிப்படையான கேள்வியை எழுப்புவோம். கெரில்லாக்குழுக்களுக்கும். கொள்ளையர் கோஷ்டிகளுக்கும் இடையி லுள்ள வேறுபாடு என்ன?

கெரில்லாக்கள் அரச வங்கிகளை பறிமுதல் செய்கிறார்கள். கொள்ளையரும் கொள்ளையில் ஈடுபடுகிறார்கள். தம்மை வேட்டை யாட வரும் அரசபடைகளை கெரில்லாக்கள் மறைந்திருந்து தாக்குகி றார்கள். பல சந்தர்ப்பங்களில் கொள்ளையரும் இதே தந்திரோபா யங்களை பாவிக்கிறார்கள். தம்மை உளவறிய முற்படும் புலனாய்வுத் துறையினரை கெரில்லாக்கள் களையெடுப்பது போன்றே கொள்ளை யரும் செய்கிறார்கள். தங்களைக் காட்டிக் கொடுப்பவர்களை பழிவாங் குகிறார்கள். தாக்குதல் தந்திரோபாயங்கள் கூட ஒத்தவையாகவே இருக்கின்றன. நடைமுறை வேலைகளிலுள்ள ஒற்றுமை போன்றே தாபன அமைப்பு வடிவத்திலும் கொள்ளையர் கோஷ்டிகள் கெரில் லாக்குழுக்களை பெருமளவில் ஒத்துள்ளன. நிரந்தர இராணுவத் தைப்போலல்லாது குறிப்பிட்ட ஒருவரின் தலைமைக்குக்கட்டுப் பட்ட சிறிய குழுக்களாக அமைதல், தமது செயற்பாடுகளில் அதி கம் வளைந்து கொடுக்கும் தன்மையுடைய தாபன வடிவம் போன்ற வற்றிலும் கெரில்லாக் குழுக்களும், கொள்ளைக் கோஷ்டிகளும் ஒத்த வையே.

அப்படியானால் கெரில்லாக்குழுக்களுக்கும், கொள்ளைக் கோஷ்டி களுக்கும் வேறுபாடே கிடையாதா? கொள்ளைக் கோஷ்டிகள் குறு கிய காலத்தினுள் பொலிசாரால் அழித்தொழிக்கப்படும் அதேவேளை ஆரம்பத்தில் சிறியதாக இருக்கும் கெரில்லாக்குழுக்கள் அரசின் வேட் டையாடலுக்கு தப்பி வாழ்ந்து படிப்படியாக வளர்ந்து ஈற்றில் அந்த நாடு முழுவதையும் கைப்பற்றி ஆட்சியதிகாரத்தை நிலை நிறுத்து கின்றனவே! இதனை எவ்வாறு விளக்குவது என்ற கேள்வி எழுவது இயல்பானதே.

www.tamilarangam.net

கெரில்லாக் குழுக்களை கொள்ளைக் கோஷ்டியிலிருந்து வேறுபடுத்தும் அடிப்படையான, தீர்க்கமான அம்சம் அரசியலே கெரில்லாக்களின் அரசியல் நோக்கே அவர்களை மக்களின் நலன்களை முன்னெடுப்பவர்களாக ஆக்குகிறது. இதனால் மக்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெறுகிறார்கள். மக்களை அணிதிரட்டி போராடவைத்து இறுதி வெற்றியடைகிறார்கள். ஆனால் கொள்ளைக் கோஷ்டிகளின் அரசியல் நோக்கற்ற தன்மையால் மக்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்படுகிறார்கள். மக்களது வெறுப்புக்கும் கோபத்திற்கும் ஆளாகிறார்கள். இக்கோபமே இறுதியில் கொள்ளைக் கோஷ்டிகளை அழித்தொழிக்கின்றது. ஆகவே கெரில்லாக் குழுவை கொள்ளைக் கோஷ்டியிலிருந்து வேறுபடுத்தும், அவர்களது வெற்றிக்கு வழிவகுக்கும் தீர்க்கமான அம்சம் அரசியலே.

## அரசியல் என்றால் என்ன?

இதுபற்றி இரண்டு விதமான தவறான பார்வைகள் எமது போராட்டத்தில் காணப்படுகின்றன. முதலாவது, அரசியல் என்பதை வெறும் பாராளுமன்ற வாதமாகப் பார்க்கும் போக்கு. இவர்களைப் பொறுத்தவரையில் அரசியல் என்பது கூட்டங்கள் கூடுவது கோசங்கள் போடுவது, தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றம் செல்வதுமே எனக்கருதுகிறார்கள். கடந்த காலத்தில் பாராளுமன்ற பாதையில் ஏற்பட்ட தோல்விகளையும், பாராளுமன்றத் தலைமையின் துரோகங்களையும் காணும் இவர்கள் அரசியல் என்பதே ஒரு மோசமான செயலாகுமென்று கருதுகிறார்கள். ஆயுதமேந்திப் போராட வக்கற்றவர்கள், சோம்பேறிகளின் காகிதப் போராட்டமே அரசியல் எனக் கருதி ஒதுக்குகிறார்கள். இதனால் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆயுதம் ஏந்திப் போரிடுவதை மட்டுமே தொழிலாகக் கொண்ட "சுத்த இராணுவத்தை" கொண்டுவர முயலுகிறார்கள். இராணுவத்திலுள்ள ஊழியர்கள் அரசியலைக் கற்றுக் கொள்வது, அரசியலைக் கோருவது, தமது தாபனத் தலைமைகளை அரசியல் ரீதியில் விமர்சிப்பது இவை அனைத்துமே மன்னிக்க முடியாத குற்றங்களாகின்றன.

இரண்டாவது போக்கு அரசியல் என்பது வெறும் பிரச்சாரமே எனக் கருதுவதாகும். இவர்கள் தாங்கள் சரியாகவும், தவறாகவும், செய்யும் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதே அரசியல் எனக் கருதுகிறார்கள். தங்கள் தாபனத்திலுள்ள நோயுற்றோர், பயந்தவர்கள், இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவாதோர்களை திரட்டி சில சுலோகங்களை கற்பித்து, பத்திரிகை வெளியீடுகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களது தாபன நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்த இயலாத கூலி எழுத்தாளர்களை'' வைத்து எழுதி தங்களை சிறந்த அரசியல் விற்பன்னர்களாக மக்கள் மத்தியில் காட்ட முனைகிறார்கள் பிறரால் எழுதப்பட்ட அறிக்கைகளை தங்களது பெயரால் வெளியிட்டும், தமது புகைப்படங்களை வேறுபட்ட கோணங்களில் வெளியிட்டும் தங்களை லெனின், மாவோ, சேகுவரா, ஹோசிமின் போன்ற தலைவர்களை ஒத்தவர்களாக காட்ட முனைகிறார்கள். தாங்கள் செய்யும் பொறுப்பற்ற, தவறான செயல்களை மக்களுக்கு இந்தத் தலைவர்களின் மேற்கோள்களை – அவற்றின் இடம், பொருள், ஏவல் ஆகியவற்றைக் கருத்திற்கெடாது– காட்டி நியாயப்படுத்துகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அரசியல் என்பது குறிப்பிட்ட ஒரு மனித குழுவின் பொருளாதாய (MATERIAL - லௌதீக) நலன்களின் திரட்சியே ஆகும். இந்த மனித குழுவின் அலகு வர்க்கமாக இருக்கையில் வர்க்க அரசியலாகவும், தேச மக்களை உள்ளடக்குகையில் தேசியமாகவும், உலகெங்குமுள்ள பரந்துபட்ட மக்களை கருதும் போது சர்வதேசியமும் ஆகிறது.

சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் ஒவ்வொரு சமூகப் பிரிவுகளும், வர்க்கங்களும் தத்தமக்கே உரிய பொருளாதாய நலன்களைக் கொண்டுள்ளன. இது அந்தந்த சமூகப் பிரிவுகளின் அரசியலாகிறது. தத்தமது பொருளாதாய நலன்களை வென்றெடுப்பதற்காக காப்பதற்காக அந்தந்த சமூகப் பிரிவுகள், வர்க்கங்கள் நடாத்தும் போராட்டமே அந்த சமுதாயத்தில் நிகழும் அரசியல் போராட்டமாகிறது. ஆரம்பத்தில் இந்தப் போராட்டங்கள் அமைதியான வழிமுறைகளான மனு கொடுத்தல், பகிரங்க விவாதங்கள் பாராளுமன்றம், சத்தியாகிரகம், உண்ணாவிரதம், ஒத்துழையாமை, வரி கொடாமை, வேலைநிறுத்தம் மறியல்போராட்டம் போன்ற வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. இப் போராட்டங்கள் வளர்ச்சி யடைய அடைய முரண்பாடுகள் கூர்மை யடைய அடைய ஆளும் வர்க்கமானது இப் போராட்டங்களை பலாத்காரத்தால் [பொலிஸ்,இராணுவத்தால்] அடக்க முற்படுகிறது. இவ்வாறு அமைதிவழிப் போராட்டங்களை ஆளும் கும்பல் பலாத்காரத்தால் நசுக்க முனையும் போது ஆளும் கும்பலின் அரசியலின் பின்னால் மறைந்திருந்த பலாத்கார வடிவத்தை போராடும் மக்கள் இனங்கண்டு அதனை தமது புரட்சிகர பலாத்காரத்தால் முகம் கொடுக்கிறார்கள்.

ஒரு புரட்சிகர போராட்டம் பின்வரும் காரணங்களால் புரட்சிகர பலாத்காரத்தை வேண்டி நிற்கிறது.

(1) சுரண்டும் வர்க்கத்தின் பலாத்கார அடக்குமுறையின் எதிர்ப்பு வடிவமே புரட்சிகர பலாத்காரமாகும்.

(2) புரட்சிகர நடவடிக்கையின் இலக்குகளான தனிச்சொத்துடமையை ஆதாரமாகக் கொண்ட உற்பத்தி உறவுகள், சுரண்டல், அரசியல் அதிகாரம் ஆகியன திட்டமான அரசியல் தாபன வடிவம் (அரசு —சட்டம்) பெற்றுள்ளன. இத்தாபனம் பலாத்கார வடிவங்களையே சார்ந்து நிற்கின்றது. சுரண்டப்படும் வர்க்கங்கள் அரசு எனும் தாபனவடிவம் பெற்று சுரண்டும் சக்திகளை தூக்கியெறிய வேண்டுமெனில் புரட்சிகர பலாத்காரத்தை பிரயோகிப்பது தவிர்க்கமுடியாததாகின்றது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(3) புரட்சியின் பின்பு சுரண்டும் வர்க்கங்கள் மீளாதிக்கம் பெறுவதை தவிர்க்கவும், மாறும் காலகட்டத்தை அமுல் செய்யவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் வடிவத்தில் புரட்சிகர பலாத்காரம் தேவைப்படுகிறது.

இவ்வாறு ஆளும் கும்பலின் பலாத்கார அடக்குமுறையை போராடும் மக்கள் தமது புரட்சிகர பலாத்காரத்தால் முகம் கொடுக்கும் செயன் முறையே யுத்தம் ஆகிறது. அதாவது அரசியலின் நீடிப்பே யுத்தம்என்பது. இந்த அர்த்தத்தில் யுத்தம் அரசியலாகவும், யுத்தம் தானே அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகிறது.

ஆதிப் பொதுவுடைமைச் சமுதாயத்தில் யுத்தமானது அந்தந்த கணக்குழுக்களுக்கிடையிலான வேட்டையாடும் நிலத்திற்கான போட்டியின் வெளிப்பாடாகவே இருந்தது. பின்பு உற்பத்தி சாதனங்கள் ஓரளவு வளர்ச்சி பெற்று உபரி தோன்றிய போது அடிமைகளின் உழைப்பு முக்கிய உற்பத்தி சக்தியானது. இதனால் அடிமைகளைப் பெறுவதற்காக யுத்தங்கள் நடத்தப்பட்டன. மகா அலெக்சாண்டர், மற்றும் ஆபிரிக்காவின் மீதான படையெடுப்புகள் இதன் பாற்பட்டவையே. அடிமை உடமைச் சமுதாயத்தில் அடிமைகளினதும், எஜமான்களினதும் முரண்பாடுகள் அடிமைகளின் விடுதலைக்கான போராட்டங்களாக வெளிப்பட்டன. விடுதலை பெற்ற அடிமைகள் நிலவுடமை சமுதாயத்திற்கு வழி சமைத்தனர். நிலவுடமை சமூக அமைப்பினுள் கருக்கொண்ட முதலாளித்துவசக்திகளினதும், பண்ணையடிமைகளினதும் நிலப்பிரபுத்துவத்துடனான அரசியல் முரண்பாடுகள் முதலாளித்துவ புரட்சியாயின. முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் உருவான மூலப்பொருள், சந்தைகளுக்கான தேவைகள் நாடுபிடிக்கும் கொள்ளைக்கார காலனித்துவ யுத்தங்களைக் கொண்டு வந்தன. ஏகாதிபத்தியத்தின் தோற்றம் சந்தைகளின் மீள்பங்கீட்டைக் கோரியது. இது 1ம் 2ம் உலக மகா யுத்தங்களை உருவாக்கியது. அடிமைப்படுத்தப்பட்ட காலனி மக்களுக்கும் ஏகாதிபத்தியங்களுக்குமிடையிலான முரண்பாடுகள் தேசிய விடுதலை யுத்தங்களை விளைவித்தன. ஒடுக்கப்படும் வர்க்கங்களினதும், ஒடுக்கும் வர்க்கங்களினதும் அரசியல் முரண்பாடுகள் வர்க்க விடுதலைக்கான யுத்தங்களாயின.

உலக வரலாற்றில் அரசியல் நோக்கமற்ற யுத்தங்கள் நடந்ததே கிடையாது. இவ்வாறு மனித குல வரலாறு முழுவதுமே மனித குழுக்களின் அரசியல் வெளிப்பாடுகளான யுத்தங்களால் நிறைந்திருப்பதை நாம் காணலாம். இதனையே கார்ல் மாக்சும், ஏங்கல்சும் தமது புகழ் பெற்ற "கம்யூனிச அறிக்கை" யில் "ஏடறிந்த மனித குல வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறே" என்றார்கள்.

## யுத்தத்தின் தன்மைகள்

யுத்தங்களை அநீதியான யுத்தங்கள், நீதியான யுத்தங்கள் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒரு சிறு கும்பலின் நலனுக்காக பரந்துபட்ட மக்களை நசுக்கும், சுரண்டலையும் அடக்குமுறையையும் கட்டவிழ்த்துவிடும் நோக்கம் கொண்ட கொள்ளைக்கார ஆக்கிரமிப்பு யுத்தங்கள் யாவும் அநீதியான யுத்தங்களாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடக்கியொடுக்கப்படும் பரந்துபட்ட மக்களின் விமோசனத்திற்கு வழி காட்டும் சுரண்டலிலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் மீட்சி பெறும் நோக்கம் கொண்ட யுத்தங்கள் யாவும் நீதியான யுத்தங்களாகும்.

வர்க்க முரண்பாடுகளும், சுரண்டலும் இந்த உலகில் உள்ள வரை முரண்பட்ட வர்க்கங்கள் தமது நலன்களுக்காக முட்டிமோதிக் கொள்வதும் அவையுத்தங்களாக வெடிப்பதும் தவிர்க்க முடியாதவையே. நாம் அநீதியான யுத்தங்களை எதிர்க்கும் அதே வேளை நீதியான யுத்தங்களை ஆதரிக்கவும் அவற்றில் ஈடுபடுவதும் அவசியமானது. ஒடுக்குமுறை மிகுந்த வர்க்க சமுதாயத்தில் சமாதானம் என்பது நடைமுறையில் சுரண்டும் வர்க்கத்தின் அநீதியான யுத்தத்தை ஏற்றுக்கொள்ளல், அடங்கியிருத்தல் என்று மட்டுமே அர்த்தப்படும். ஏனெனில் சுரண்டு அல்லது சுரண்டப்படு; கொல் அல்லது கொல்லப்படு என்பதே வர்க்க சமுதாயத்தின் விதியாகும். ஆகவே வர்க்க சமுதாயத்தில் சமாதானம், சமரசம் எனும் வார்த்தைகளின் பின்னாலுள்ள ஆளும் வர்க்கத்தின் கபடத்தனங்களை இனங்காணத் தவறக் கூடாது.

நாம் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தத்தை ஒழிப்பதற்காக போராடுபவர்கள். இதனை ஒழிப்பதற்கு ஒரேவழி யுத்தத்தை யுத்தத்தால் எதிர்ப்பது; எதிர்ப்புரட்சிகர யுத்தத்தை புரட்சிகர யுத்தத்தால் எதிர்ப்பது; தேசிய எதிர்ப்பு யுத்தத்தை தேசிய புரட்சிகர யுத்தத்தால் எதிர்ப்பது மட்டுமே ஆகும். துப்பாக்கியை ஒழிப்பதானால் துப்பாக்கியை ஏந்துவது அவசியமானது.

மனித சமுதாயம் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட அரசுகள் ஒழிக்கப்பட்ட ஒரு கட்டத்திற்கு முன்னேறியதும் அங்கு எதுவித யுத்தங்களும் இருக்க மாட்டா, அநீதியான யுத்தங்களோ, நீதியான யுத்தங்களோ இருக்கமாட்டா. இது மனிதகுலத்தின் நித்திய சமாதான சகாப்தமாக இருக்கும்.

## இராணுவம்

யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல், அரசியல் என்பது இரத்தம் சிந்தா யுத்தம் என்பது உண்மையே. ஆனால் யுத்தத்திற்கு அதற்கே உரிய விசேட குணாம்சங்கள் உண்டு. இந்த அர்த்தத்தில் யுத்தத்தை சாதாரண அரசியலுடன் சமப்படுத்த முடியாது. விசேட நடவடிக்கைகள் மூலம் அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது. அரசியல் அதன் அமைதியான வழிகளில் முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு வளர்ச்சி அடைந்ததும் அதன் பாதையிலுள்ள தடைகளை நீக்குவதற்காக யுத்தம் வெடிக்கிறது.

www.tamilarangam.net

யுத்தத்தின் குறிப்பான குணாதிசயங்களில் நின்றும் குறிப்பான தாபன வடிவமும் - இராணுவம் - குறிப்பான முறைகளில் தொகுப் பொன்றும் யுத்த தந்திரங்கள், நடைமுறைத்தந்திரங்கள் -- குறிப் பான ஒழுங்கைப் போக்கும் - தாக்குதலும் தற்காப்பும் — குறிப்பான வகை ஊழியரும் - போர்வீரர் - குறிப்பான வகை ஊழியர் பயிற்சி முறைகளும் -- இராணுவப் பயிற்சிகள் — குறிப்பான தாபனக் கட்டுப்பாடுகள் — இராணுவக் கட்டுப்பாடுகள் தோன்றுகின்றன.

எனவே யுத்த அனுபவம் குறிப்பான ஒருவகை அனுபவமாகும். யுத்தத்தில் பங்குபற்றும் சகலரும் தங்கள் வழமையான பழக்க வழக் கங்களை கைவிட்டு தம்மை யுத்தத்திற்கு பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பின்பே அவர்களால் வெற்றி பெற முடியும்.

அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னோர் வர்க்கத்தை ஒடுக்குவ தற்கான கருவியாகும். இந்த அரசின் பிரதான பகுதி இராணுவ மாகும். எந்த வர்க்கத்தின் கைகளில் இந்த அரசியல் அதிகாரம் இருக்கின்றதோ அந்த வர்க்க நலன்களை இந்த அரசு காக்கும். ஆகவே யார் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பினாலும் அவர் பலமான படையொன்றினைக் கொண்டிருக்க வேண்டும். இத னையே ''துப்பாக்கிக் குழலில் இருந்தே அரசியல் அதிகாரம் பிறக் கிறது" எனக் குறிப்பிட்டார் மாவோ. யாரிடம் படையுள்ளதோ அவ ரிடமே அரசியல் அதிகாரமுண்டு. மக்கள் படையொன்று இல்லை யேல் மக்களுக்கு ஒன்றுமேயில்லை. ஆயுத சக்தியால் அரசியல் அதி காரத்தை கைப்பற்றுவது, யுத்தத்தால் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது புரட்சியின் கேந்திரக் கடமையும், அதன் அதியுயர்வடிவமு மாகும்.

## இராணுவத்தில் அரசியல்

யுத்தம் என்பது மனிதர் தம்மைத் தாமே பரஸ்பரம் வதை செய்து கொள்ளும் பிசாசு. ஈவிரக்கம் அற்றது. உயர்ந்த தியாகங்க ளையும் நீண்ட அர்ப்பணிப்புக்களையும் விலையாகக் கொடுத்தே வெற்றியை நிலை நாட்ட முடியும். யுத்தத்தின் அரசியல் தன்மை அது எப்படி நீதியானது என்பதையும் அதன் நோக்கங்களையும், அது தன்னுடையதும் அனைத்து மக்களினதும் விடுவுக்கு வழிவகுப் பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் புரட்சிகர இராணுவ வீரன் ''அனைத்து மக்களின் விமோசனத்திற்காகவே நான்போராடுகிறேன்'' என்ற உணர்வைப் பெறுகிறான். இதுவே அவனது தியாகத்தினதும் வீரத்தினதும், போர்க்குணாம்சத்தினதும், உருக்குப் போன்ற சுயமான கட்டுப்பாட்டினதும் ஊற்று மூலமாகும்.

யுத்தத்தின் அரசியலைப் புரிந்து கொண்ட இராணுவமானது வீரர்களுக்கிடையிலும், வீரர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையிலும், வீரர்களுக்கும் மக்களுக்குமிடையில் இறுக்கமான ஐக்கியத்தைப் பெற் றுக் கொள்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் மயமாக்கலானது வீரனின் உணர்வு பூர்வமான இயக்கப் பாத்திரத்தை உறுதி செய்கிறது. யுத்தத்தின் வெற்றியோ தோல்வியோ இருதரப்புக்களிலுமான இராணுவ (வீரர்களின் எண்ணிக்கை பெற்ற பயிற்சி, ஆயுதங்களின்தரம்), அரசியல், பொருளாதார புவியியல் சூழ்நிலைகளாலும் ஒவ்வொரு தரப்பும் நடத்தும யுத்தத்தின் இயல்பாலும், ஒவ்வொரு தரப்பும் கொண்டுள்ள சர்வதேச ஆதரவினாலும் நிர்ணயிக்கப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் அது இவற்றால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. தம்மளவில் இவையாவும் வெற்றி அல்லது தோல்வியின் சாத்தியக் கூறை மட்டுமே தருகின்றன. வெற்றியையோ தோல்வியையோ முடிவாக்குவதில்லை. வெற்றி தோல்வியை முடிவாக்க மனிதனின் அகநிலைப்பட்ட பிரயாசையும் அதாவது யுத்தத்திற்கு வழிகாட்டுவதும், நடாத்துவதும், யுத்தத்தில் மனிதனின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரமும் சேரவேண்டும். இதுவே புரட்சிகர இராணுவத்தின் வெல்லற்கரிய தன்மையின் இரகசியமாகும், யுத்தத்தின் ஆயுதங்கள் முக்கியமான அம்சம்; ஆனால் தீர்க்கமான அம்சம் அல்ல. தீர்க்கமான அம்சம் மக்களே அன்றி பொருட்கள் அல்ல. பலப்போட்டி என்பது இராணுவ பலம், பொருளாதார பலம் இவற்றின் போட்டி மாத்திரமல்ல, மனிதபலம், ஆத்மீக பலம் இவற்றின் போட்டியுமாகும். இராணுவ, பொருளாதார பலங்கள் மக்களால் தான் ஆக்கப்படுகின்றன.

யுத்தம் செய்யவேண்டும் என்ற விருப்பத்திற்காக யுத்தத்தில் ஈடுபடுவதால் தோன்றும் மகிழ்ச்சிக்காக ஒருவரால் யுத்தத்தில் நீண்ட காலம் ஈடுபடமுடியாது. மாணவ பருவத்தில் நுரைத்தெழும் வீர சாகச உணர்வுகள் பல இளைஞர்கள் இராணுவத்தின்பால் கவர்ந்திழுத்தாலும் நீண்டதும் ஈவிரக்கமற்ற விடாப்பிடியான யுத்தத்தில் இவர்களால் தாக்குப்பிடிக்கமுடியாது. அரசியல் உணர்விலிருந்து அந்நியப்பட்ட போராளிகளின் குழுக்கள் தமக்குள் சச்சரவிட்டும், ஊழல்படிந்தும் படிப்படியாக போர்க்குணாம்சத்தை இழந்தும் சமுதாயத்திற்கு ஒரு சுமையாகிறார்கள்.

முதலாளித்துவ சமூகத்தில் ஆளும் வர்க்கங்கள் ஏனைய வர்க்கங்களை ஒடுக்குவதற்காக இராணுவத்தை கருவியாக பயன்படுத்துவார்கள். ஆயினும் இந்த இராணுவத்தில் பெரும்பாலானோர் ஒடுக்கப்படும் வர்க்கங்களின் அங்கத்தவர்களே. அதாவது சீருடையிலுள்ள விவசாயிகள்—தொழிலாளரின் பிள்ளைகளே. இவ்வாறே காலனி ஆதிக்க நாடுகள் தமக்குத் தேவையான துருப்புக்களின் பெரும் பகுதியை அந்தந்த காலனித்துவ நாடுகளிலிருந்தே பெற்றுக்கொள்கிறார்கள். உதாரணமாக இந்தியாவில் பிரித்தானியா உள்ளூர் மக்களைக் கொண்டபடைகளை அமைத்து இரண்டாம் உலக மகாயுத்தத்திலும் பயன்படுத்தினார்கள்.

www.tamilarangam.net

வறுமை காரணமாக இதனை ஒரு வயிற்றுப் பிழைப்பிற்கான தொழிலாகக் கருதியும், அவர்கள் நடத்தும் யுத்தத்தின் அநீதியான தன்மையை உணராமலும் பல ஒடுக்கப்படும் வர்க்கத்தை, தேசத்தைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தில் சேர்கிறார்கள். இவர்கள் கடுமையான இராணுவக் கட்டுப்பாடுகளினாலும், ஆளும்வர்க்க, ஏகாதிபத்திய நலன்களைப் பேணும் உத்தியோகத்தர் தலைமையிலும் தம் சொந்த மக்களையே அடக்குவதற்கு பயன் படுத்தப்படுகிறார்கள். அந்த யுத்தத்தின் அரசியல் நோக்கங்களை, அநீதியான தன்மையை வீரர்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக அரசியலுக்கு அப்பாற்பட்ட யுத்தம் பற்றியும், அரசியல் கலக்காத இராணுவம் பற்றியும், கபடத்தனமாக கூறுகிறார்கள் பல சந்தர்ப்பங்களில் கட்டாயப் படுத்தி தமது சொந்த மக்களுக்கெதிராகப் போரிடச் செய்கிறார்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பல ஆபிரிக்கர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு யுத்தமுனைக்கு துருப்புக்களாக அனுப்பப்பட்டார்கள். இந்த நிலையில் அவர்கள் யுத்தத்தில் ஈடுபட விரும்பாவிட்டாலும் தப்பி ஓட முடியாது. ஆகவே தமது உயிரைப் பாதுகாப்பதற்காகவாவது அந்த யுத்தத்தில் போரிட்டே ஆகவேண்டும். என்ற நிலையில் போரிட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவ்வாறே 1982ம் ஆண்டு லெபனான் மீது இஸ்ரேல் நடாத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் போது யுத்தத்தில் ஈடுபட்ட யுத்த விமானங்களின் ஓட்டிகள் தமது ஆசனங்களில் வைத்து பூட்டுக்களால் பூட்டப்பட்டிருந்தனர். வழமையாக யுத்த விமான ஓட்டிகள் தமது விமானம் எதிரியினால் தாக்கப்பட்டுவிட்டால் விமானத்திலிருந்து ''பரசூட்'' மூலம் குதிப்பதற்கு அனுமதிக்கப்படுவதுண்டு. ஏனெனில் விமானம் இழக்கப்பட்டாலும் போர்வீரனின் உயிராவது காப்பாற்றப்படலாம் என்ற எண்ணமே. ஆனால் இஸ்ரேல் தனது விமான ஓட்டிகளை தாக்குதலுக்குள்ளான விமானத்துடனேயே அழியுமாறு நிர்ப்பந்தித்தது இந்த வாய்ப்பை அளித்தால் தாக்காமலேயே குதித்து தப்பி விடுவார்கள் எனக் கருதினார்கள்.

இவ்வாறு தனது துருப்புக்களை பலாத்காரமாக நிர்ப்பந்தித்து தனது மக்களுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபடுத்தும் அதேவேளை அந்த வீரர்களின் கவனங்களை திசை திருப்புவதற்காக இராணுவத்தில் மலிவான விலையில் புகைத்தல், மது, விபச்சாரம், போன்ற வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். யுத்தங்களின் போது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் சூறையாடல்களில் ஈடுபடவும், பெண்களை பலாத்காரம் செய்யவும் அனுமதிக்கப்படுவார்கள். இது போன்ற நடவடிக்கைகளால் துருப்புக்கள் தமது யுத்தத்தின் சரியான தன்மையை உணருவதில் நின்றும் தவிர்க்கப்படுவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனினும் இந்த இராணுவ வீரர்கள் யுத்தத்தின் அநீதியான தன்மைபற்றியும், அதன் அரசியல் நோக்கம் பற்றியும் தனது சொந்த மக்களுக்கு எதிராக பயன்படுத்துவதுமான போக்கை சரியாக இனம் காணும்போது அதாவது சரியான அரசியலை இனங்காணும் போது அவர்கள் தமது மக்களுடன் சேர்ந்து தமது முன்னாள் எஜமான்களுக்கெதிராக போரிடுவர். உலகப் புரட்சி வரலாற்றில் பல தடவை இது போன்ற சம்பவங்கள் நேர்ந்துள்ளன. அடக்குமுறை இராணுவத்துள்ள வீரர்களிடையே வீரர்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுதல், உயரதிகாரிகளின் மனித நேயமற்ற போக்குகள், வீரர்களை அடிமைகளாக கருதும் மனோபாவம், படுமோசமான தண்டனை முறைகள் போன்ற காரணங்களால் அடக்குமுறை இராணுவத்தினுள் அமைதியின்மையை தோற்றுவித்து அவர்களது வர்க்க, தேசிய உணர்வுகளைத் தூண்டுகின்றன. தாம் நடத்தும் யுத்தத்தின் அரசியல் நோக்கங்களைக் காணுமாறு செய்கின்றன. இப்படிப்பட்ட அரசியலைப் புரிந்து கொண்ட இராணுவமானது போராட்டத்திலீடுபடும் தமது சகோதர தொழிலாளர் விவசாயிகளை நசுக்குமாறு ஏவப்படும்போது தமது சகோதரர்கள், உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருக்கு எதிராக ஆயுமேந்த வேண்டிய நிலை ஏற்படும்போது தமது நிலைப்பாட்டை உறுதியாக எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவர்களில் பெரும்பாலானோர் தமது நலன்கள் போராடும் பரந்துபட்ட மக்களின் நலன்களுடன் ஒன்றுபடுவதை காணும் போது அவர்கள் புரட்சியின் பால் தம்மை இணைத்துக் கொள்கிறார்கள் ரஷ்யப் புரட்சியின் போது பல்லாயிரக்கணக்கான ஜாரின் துருப்புக்கள் புரட்சியின் பால் சேர்ந்தன. சீனாவிலும், வியட்நாமிலும், கியூபாவிலும், ஈரானிலும்இவை நடைபெற்றன.

அடக்குமுறை இராணுவத்திலுள்ள வீரர்களிடையே புரட்சிகர உணர்வுகளை ஏற்படுத்துவதை ஒவ்வொரு புரட்சிகர தாபனங்களும் தமது வேலைத்திட்டங்களில் ஒன்றாகவே கொண்டுள்ளன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்கின்றன.

(1) மோதல்களில் இறந்த எதிரித்துருப்புக்களின் சடலங்களுக்கு உரிய மரியாதை செலுத்துதல்.

(2) காயப்பட்ட எதிரித்துருப்பினர்களுக்கு சாத்தியமானவரை மருந்திட்டு நல்ல முறையில் நடத்தி விடுதலை செய்தல்.

(3) யுத்தத்தின் போது கைதானவர்கள், மோசமான குற்றங்களை கடந்த காலத்தில் செய்யாதவர்களாக உள்ளபோது அவர்களை மரியாதையுடன் நடாத்தி யுத்தத்தின் நோக்கங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறல்; விருப்பியோரை புரட்சிகர அணிகளில் சேர்த்துக் கொள்ளல்; ஏனையோரை போதனையின் பின் விடுதலைசெய்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(4) எதிரித் துருப்புக்களிடையே யுத்தத்தின் நோக்கம் பற்றிய பிரச்சாரங்களை பல வழிகளிலும் மேற்கொள்ளல்.

(5) எதிரித் துருப்புக்கள் சரணடையும் பட்சத்தில் அவர்களது உயிர்களுக்கு உத்தரவாதம் கொடுத்தல்.

இந்த செயன்முறைகள் இராணுவ ரீதியிலும் அதிகம் இலாபகரமானவை. எதிரித் துருப்புக்கள்புரட்சிப் படைகளை முகம் கொடுக்கும் போதெல்லாம் மோதலில் ஈடுட்டு தமதுயிரை பணயம் வைப்பதிலும் பார்க்க சரணடைவது நன்றெனக் கருதும் போக்கு ஏற்படுகின்றது. இந்த மனோபாவம் ஆளும் கும்பலுக்கு அதிக கலக்கத்தை தொடுக்க வல்லது. இதனை அவர்கள் புரட்சியாளரின் 'சதிச்செயல்,, என அழைப்பார்கள்.

இவ்விதமான சம்பவங்களை தவிர்ப்பதற்காகவே அரசியல் அற்ற இராணுவத்தை ஆளும் வர்க்கத்தினர் நிறுவ முயலுவர். முதலாளித்துவ இராணுவங்களில் காணப்படும் ஒழுக்கமின்மை, தாழ்ந்த உணர்வுமட்டம், மக்களுக்கெதிரான அராஜகம் போன்றவற்றின் ஊற்று மூலமே இந்த கபடத்தனமான செயன்முறைகளே. புரட்சிகர இராணுவத்திற்குமிடையேயுள்ள மிக அடிப்படையான வேறுபாடே இராணுவத்தில் வீரர்களின் அரசியல் உணர்வே ஆகும்.

## கட்சியும் இராணுவமும்

புரட்சிகர கட்சியானது தனது அரசியலை முன்னெடுக்கும் பல்வேறுபட்ட வடிவங்களுள் ஒன்றே யுத்தமாதலால் இராணுவமானது கட்சியின் கட்டளைக்குட்பட்டதாக, கட்சியின் வழிகாட்டலில் இயங்குவதாக இருக்க வேண்டும். மாறாக இராணுவம் கட்சியை கட்டுப்படுத்தும் நிலை தோன்றுமாயின் இது முழுடபோராட்டத்தையும் சீரழிக்கக் கூடியது. ''அரசியலுக்கு அப்பாற்பட்ட இராணுவம்,, எனும் தன்மையே இதுவாகும். ஏனெனில் கட்சியானது பல வேறுபட்ட வெகுஜன தாபனங்களையும் தொழிற்சங்கங்களையும் வழிநடத்தி ஒருங்கிணைக்கும். கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத இராணுவம் கட்சி முன்னெடுக்கும் பொதுப்போராட்டத்திலிருந்துதனிமைப்படும் இது தவிர்க்கமுடியாமல் மக்களின் நலன்களுக்கு மாறாக அராஜகத்தை நோக்கி இட்டுச் செல்லும். இதனையே மாவோ ''கட்சி துபபாக்சி மீது ஆணை செலுத்துகின்றது, கட்சிமீது துப்பாக்கி ஆணைசெலுத்தக் கூடாது'' என்றார்.

யுத்தம் என்பது அரசியலின் தொடர்ச்சியே என்ற அர்த்தத்தில் இராணுவமானது யுத்தத்லீடுபடுவதன் மூலம் தனது சிறப்பான அரசியல் கடமைகளை ஆற்றுகின்றது என்றபோதும் அது தனக்கே உரிய இன்னும் பல அரசியற் கடமைகளைக் கொண்டுள்ளது. இதனை மாவோ பின்வருமாறு அழகாகக் கூறுகின்றார் ''செஞ்சேனை வீரர்கள் வெறுமனே சண்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட வேண்டும் என்பதற்காக போரிடுவதில்லை. மக்கள் மத்தியில் பிரச்சாரங்களை மேற்கொண்டு, அவர்களை தாபனமயப் படுத்தி ஆயுத பாணிகளாக்கி அவர்களை புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவ உதவ வேண்டும். இல்லாத போது செஞ்சேனையின் இருப்பிலோ அதன் போராட்டத்திலோ அர்த்தமே கிடையாது.''

புரட்சிகர யுத்தத்தின் ஆரம்பத்தில் நிராயுதபாணிகளான மக்கள் பலம் பொருந்திய எதிரியின் முன்னால் நிறுத்தப் பட்டுள்ளார்கள். எதிரி யானவன் இராணுவத்தின் பயிற்சியாலும் ஆயுதங்களினாலும் மேல் நிலையில் உள்ளான். நிதி மற்றும் ஏனைய வளங்களையும் தனது கைகளில் வைத்திருக்கின்றான். ஆனால் அவன் ஒரு அநீதியான யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதனால் மக்களின் வெறுப்பை சம்பாதிக்கின்றான். அத்துடன் அவனது துருப்புக்கள் தமது சொந்த வர்க்க நலன்களுக்கு எதிராகப் போராடுவதினால் உளவியல் ரீதியாக பலவீனமுற்றவர்களாக உள்ளனர். புரட்சிகர இராணுவமானது இந்த நிலைமைகளை கவனமாக ஆராய்ந்து தனக்குச்சாதகமான அம்சங்களை முன்னெடுத்து எதிரியை அவனுக்குப் பாதகமான அம்சங்களை அவன் முகம் கொடுக்குமாறு செய்யும் மூல உபாயங்களையும், தந்திரோபாயங்களையும் மேற் கொள்கிறது. இங்கு புரட்சிகர இராணுவத்திற்குள்ள சாதகமான அம்சங்கள் வெகுஜனங்களின் ஆதரவும், சொந்த போராளிகளின் உணர்வு பூர்வமான இயக்கப் பாத்திரமுமே ஆகும். ஆகவே இவற்றை மேலும் மேலும் வளர்த்தெடுத்து பயன்படுத்த முயலவேண்டும். புரட்சிகர யுத்தம் என்பது பொதுமக்களின் யுத்தமாகும். பொதுமக்களை தட்டியெழுப்பி அவர்களை சார்ந்து நின்றால் தான் இதில் வெற்றிபெற இயலும்.

இத்தகைய மகத்தான ஒரு தேசிய புரட்சிகர யுத்தத்தை சர்வவியாபகமான, ஆழமான அரசியல் அணிதிரட்டலின்றி வெல்ல முடியாது. எதிரியின் துப்பாக்கி வெடிகளும், எதிரியின் விமானங்களால் வீசப்பட்ட குண்டுகளுமே மக்களில் பெரும்பாலானோருக்கு யுத்த செய்தியை அறிவித்தன. அதுவும் ஒரு வித அணிதிரட்டல் தான். ஆனால் அது எமக்கு எதிரியால் செய்து தரப்பட்டது. அதை நாமே செய்து கொள்ளவில்லை.

நாம் அரசியல் அணிதிரட்டலை பூரணமாகப் பயன்படுத்தி எதிரியிலும் ஓங்கிவிட வேண்டும். இது உண்மையில் முதன்மையாக முக்கியத்துவமுடையதாக இருக்கையில் ஆயுதங்களிலும் பிற விடயங்களிலுமான எமது தாழ்சியானது இரண்டாம்பட்சம் மட்டுமே. நாடு பூராவிலுமுள்ள சாதாரண மக்களை அணிதிரட்டுவதானது எதிரியை மூழ்கடிக்க பெருங் கடலொன்றை சிருஷ்டிக்கும். ஆயுதங்களிலும் பிறவிடயங்களிலுமான எமது தாழ்ச்சிகளை நிவர்த்தி செய்யக் கூடிய நிலைமைகளை சிருஷ்டிக்கும். யுத்தத்தில் சர்வ தேவைகளையும் கடப்பதற்கான முன் தேவைகளை சிருஷ்டிக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெல்லுவதற்கு நாம் பதில் தாக்குதல் யுத்தத்திலும், ஐக்கிய முன்னணியிலும், நீண்டகால யுத்தத்திலுமே விடாப்பிடியாக இருக்க வேண்டும். ஆனால் இவையெல்லாம் சாதாரண மக்களை அணிதிரட்டுவதில் நின்றும் பிரிக்க முடியாதவை. வெல்ல விரும்புவது ஆனால் அரசியல் அணிதிரட்டலை புறக்கணிப்பது "தேரை வடக்கே செலுத்தி தெற்குக்குப் போக விரும்புவது போலாகும்." அதன் விளைவு தவிர்க்க முடியாது வெற்றியை பறிகொடுப்பதாகவே இருக்கும்.

## அரசியல் அணிதிரட்டல் என்றால் என்ன ?

இராணுவத்திற்கும் மக்களுக்கும் யுத்தத்தின் அரசியல் குறிக்கோளைப் பற்றி கூறுவதாகும். ஒவ்வொரு படைவீரனும் பிரஜையும் யுத்தம் ஏன் நடத்தப்பட வேண்டும் என்பதையும் அது தன்னோடு எப்படி சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும் புரிந்து கொள்ளல் அவசியமானது.

எமது குறிக்கோளை சகல மக்களுக்கும் பிரகடனம் செய்தால் மட்டுமே ஒரு பேரெழுச்சியை சிருஷ்டிக்கவும் பல லட்சக்கணக்கானோரை ஒரு மனிதன் போல ஐக்கியப்படுத்தி யுத்தத்திற்காக தம்மிடமுள்ள அனைத்தையும் அர்ப்பணிக்கச் செய்யவும் முடியும். அவர்களுக்கு வெறுமனே குறிக்கோளை மட்டும் விளக்குவது போதாது. அதை அடைவதற்கான நடவடிக்கைகளும், கொள்கைகளும் தரப்பட வேண்டும். அதாவது அரசியல் வேலைத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும். தெட்டத் தெளிவான, திட்டவட்டமான வேலைத் திட்டமொன்று இல்லாமல் போரை இறுதிவரை நடாத்தி முடிக்க சகல ஆயுதப் படைகளையும் முழுமக்களையும் அணிதிரட்டுவது அசாத்தியம்.

## எவ்வாறு அணிதிரட்டுவது ?

கருத்தரங்குகள், கூட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், செய்திப் பத்திரிகை, சஞ்சிகைகள், புத்தகங்கள் மூலமும், கலாச்சார நிகழ்ச்சிகள் மூலமும், வெகுஜன தாபனங்கள் மூலமும், கட்சி ஊழியர்கள் மூலமும், கட்சிப்பாடசாலைகள் மூலமும் அணிதிரட்ட வேண்டும். மக்களின் ரசனைக்குப் பொருத்தமான விதத்திலும், மக்கள் உணர்விற்கு இணக்கமான முறையிலும் செய்யப்பட வேண்டும்.

ஒருமுறை அணிதிரட்டினால் போதாது யுத்தத்திற்கான அணிதிரட்டல் தொடர்ச்சியானதாக இருக்க வேண்டும். எமது வேலை எமது அரசியல் வேலைத்திட்டத்தை யாந்திரீக ரீதியில் பராயணம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்வதல்ல. ஏனெனில் அத்தகைய பராயணங்களுக்கு எவரும் செவி சாய்க்கமாட்டார்கள். நாம் யுத்தத்திற்கான அணிதிரட்டலை யுத்தத்திலான அபிவிருத்திகளுடனும், படைவீரர்களினதும் மக்களினதும் வாழ்வுடன் இணைக்கவும், அதைத் தொடர்ச்சியான ஒரு இயக்கமாக ஆக்கவும் வேண்டும். இது யுத்தத்தில் எமது வெற்றி பிரதானமாகத் தங்கியிருக்கும் பிரமாண்ட முக்கியத்துவமுடைய ஒரு விஷயமாகும்.

இதுவரை தொகுத்துக் கூறப்பட்ட யுத்தம் பற்றிய மார்க்சிய கருத்துக்களின் வெளிச்சத்தில் கடந்த கால தமிழீழப் போராட்டத்தைப் பார்ப்பது எமது இன்றைய நெருக்கடிகளுக்கான காரணங்களைப் புரிந்து கொள்ளவும், அவற்றை திருத்தி மகத்தான வருங்காலத்தை நோக்கி நடைபோடவும் வழிசமைக்கும்.

✤ ✤ ✤

"நம்மிடையே நடக்கும் வாக்குவாதங்களை மார்க்சியத்தின் விரோதிகள் நாட்டமாய்ப் பார்த்து கேலி நகைப்பு நகைக்கின்றார்கள். நம் கட்சியில் உள்ள குற்றங்குறைகளைப் பற்றிக் குறிப்பிடும் வாசகங்களை மட்டும் என் புத்தகத்திலிருந்து, அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொறுக்கி எடுத்து, தங்களுடைய நோக்கங்களை சாதித்துக்கொள்வதற்காக உபயோகப்படுத்த முயற்சிப்பார்கள் என்பது உறுதியே. ஆனால், இப்படி அவர்கள் செய்வதைப்பார்த்து கலங்கக்கூடிய நிலையில் இன்றைய ரஷ்ய சமூக ஜனநாயகவாதிகள் இல்லை. ஏனெனில் ஏற்கனவே போராட்டத்தில் பண்பட்டு உறுதியுடையவர்களாகிவிட்டார்கள், எதிரிகள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் சுயவிமர்சனத்திலிறங்கி தம் தவறுகளையும், குற்றங்குறைகளையும் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்திக் கொண்டிருப்பார்கள். தொழிலாளி வர்க்க இயக்கம் வளர வளர, அவை நிச்சயமாகவும், தவிர்க்க முடியாததாகவும் நிவர்த்திக்கப்படும்"

—லெனின்

www.tamilarangam.net

## எமது ஆயுதப் போராட்டத்தின் நோக்கம் என்ன?

சிறிலங்கா இனவாத முதலாளித்துவ அரசினதும், ஏகாதிபத்திய சக்திகளினதும் சுரண்டலிலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் தமிழீழ மக்களை விடுதலை செய்தல், இதன் மூலம் சிங்கள பாட்டாளி மக்களின் புரட்சிக்கு வழிசமைத்தல், எனவே இந்தப் போராட்டமானது இலங்கை தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வாகவும், உலகப்புரட்சியின் ஓர் அம்சமாகவும் விளங்குகிறது.

இந்த பரந்துபட்ட அரசியல் நோக்கத்தை அடிப்படையாக வைத்து தூரதிருஷ்டியுடன் எமது நாட்டின் புவியியல், பொருளாதார அம்சங்களையும், தமிழ் மக்களின் தனித்துவமான அம்சங்களையும், எதிரியின் இராணுவத் தன்மையையும், சர்வதேச நிலைமைகளையும் கருத்திற்கெடுத்து விடுதலைக்கான அரசியல், இராணுவ வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் தமிழீழக் கோரிக்கையை தமது பாராளுமன்ற ஆசனத்தை கைப்பற்றும் சுலோகமாக வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் இதனை எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால் ஆயுதமேந்திப் போரிடப் புறப்பட்ட இயக்கங்களிடம் கூட இது போன்றதொரு முழுமையான வேலைத்திட்டம் இல்லாதது வருந்தத் தக்கதே. அவ்வப்போது தமது தேவைகளுக்கும் தமது உணர்ச்சிகளுக்கும் ஏற்ப நடவடிக்கைகளில் இறங்கி, பின்பு அதன் விளைவுகளுக் கேற்ப அடுத்த நடவடிக்கைகளை எடுத்து இவ்வாறு சம்பவங்களின் பின்னாலேயே சென்றுள்ளமையே இன்று வரை நடந்து வருவதாகும்.

சிலர் தமது நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக தமது நடவடிக்கைகளை ஒத்த ஏதாவது சில அம்சங்களை கொண்ட ஏதாவது ஒரு நாட்டின் புரட்சிகர போராட்டத்தை தாம் பின்பற்றுவதாக பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் அந்தப் போராட்ட திட்டங்களைக் கூட சரியாக பின்பற்றவில்லை என்பதை கூர்ந்து அவதானித்தால் இனம்கண்டு கொள்ளலாம்.

யாழ் குடாநாட்டினுள் மட்டுமே செயற்படுவதை நகர்ப்புற கெரில்லா வாதத்தினூடாக நியாயப்படுத்துவார்கள். வெறும் இராணுவக் குழுவாக மட்டும் செயற்பட்டு தமது அரசியற் கடமைகளை கைவிடுபவர்கள் ரெஜிஸ்டெப்ரேயின் "கட்சியில்லா புரட்சி" தத்துவத்தின் பின்னால் தமது பலவீனங்களை மறைத்துக் கொண்டார்கள். ஆயுத நடவடிக்கைகளில் இறங்க முடியாத போது "மக்கள் யுத்தத்தைப்" பற்றி கூறியவர்கள் வாய்ப்புக்கள் கிடைத்த போது தம்மால் முன்வைக்கப்பட்ட கோசங்களை கைவிட்டதுமுண்டு. பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்குதல்களை நடத்தி போராட்டத்தை முன்னெடுக்க முடியாதவர்கள் கெரில்லா எதிர்ப்பு வாதத்தை முன்வைக்கிறார்கள். இப்படிக் கூறுவதால் இத்தத்துவங்களைக் கூறுபவர்கள் எல்லோருமே சந்தர்ப்பவாதிகள் என நாம் கருதவில்லை. ஆனால் கடந்த காலத்தில் பலர் தாம் கூறும் தத்துவங்களை, போராட்ட முறைகளை விசுவாசமாக முன்னெடுக்காமல் அவ்வப்போது தமது போக்குகளை நியாயப்படுத்தவே தமக்கு வசதியான விதத்தில் பாவித்துள்ளமையை கவனிக்கத் தவறக்கூடாது என்பதே எமது வாதமாகும். ஏதாவது ஒரு போராட்ட முறையை பின்பற்றுவதாக கூறுபவர்களிடம் அத்திட்டத்தை முழுமையாக வெற்றி பெறச் செய்வதற்கான வேலைத்திட்டம் இருக்கின்றதா என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்,

இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால் தாம் குறிப்பிடும் கோட்பாடுகளை சரியாகக் கடைப்பிடிக்கவில்லை என்பதை சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் தாம் தவறெனக் கூறி நிராகரித்ததாகக் கூறும் நடவடிக்கைகளில் இறங்குவதன் மூலம் நிரூபித்துவிடுகிறார்கள்.

ஆயுதமேந்திய குழுக்களின் தலைவர்களில் பலருக்கு இருக்கும் அரசியல் வறுமையும், முழுமையான மக்களின் நலன்களுக்கு வழி வகுக்க அவர்களது வர்க்க நலன்கள் இடம் கொடாமையுமே இதன் பிரதான காரணங்களாகும். இதுவே இன்றைய நெருக்கடிகளில் பிரதானமானது.

## எதிரிகளை நண்பர்களை இனம் காணல்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு முழுமையான அரசியல் போராட்டமாக கருதி இதில் சம்பந்தப்பட்டுள்ள சக்திகள் பற்றிய மதிப்பீட்டை செய்வது எமது யுத்த தந்திரத்தையும், நடைமுறைத் தந்திரங்களையும் வகுப்பதில் மிக முக்கியமானது.

இந்த வகையில் எமது போராட்டத்தின் முதன்மை சக்திகள், துணைச்சக்திகள், நட்புசக்திகள், எதிரி, எதிரியின் நட்பு சக்திகள் போன்றவற்றை சரியாக இனங்கண்டு முதன்மையான சக்திகளின் தலைமையில் துணைச்சக்திகளை அணிதிரட்டவும், எமது நட்புசக்திகளை படிப்படியாக வென்றெடுப்பதன் மூலம் எதிரியை மேலும் மேலும் தனிமைப் படுத்துவது எமது விடுதலைக்கு முன்நிபந்தனையானது. அத்தோடு நாம் வெளிச்சக்திகளின் உதவிகளை நாடும் போது அவை எமது போராட்டத்தில் நட்பு சக்திதானா என உறுதி செய்த பின்பே உதவிகளைப் பெற வேண்டும். இங்கும் எமது போராட்டத்தில் அரசியற் தன்மைகளை இனம் காண்பதில் ஏற்பட்ட தவறுகள் சிங்கள மக்களை வென்றெடுப்பதற்குப் பதிலாக அவர்களை சிறிலங்கா அரசு பயன்படுத்த அனுமதித்துள்ளோம். முஸ்லீம், மலையக மக்கள் எமது போராட்டத்துடன் சரியாக இணைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கப்படவில்லை. இயக்கங்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளாலேயே இவ்வுறவுகள் பெருமளவில் சிதைக்கப்பட்டுமுள்ளது. தென்னிலங்கையில் நடைபெறும் உழைக்கும் மக்களின் போராட்டத்திலிருந்து தமிழீழ விடுதலைப் போராட்டமானது தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. இன்று எமது போராட்டம் எமது மக்களின் சொந்தப் பலத்தில் தங்கியிருப்பதற்கு பதிலாக இதனை அந்நிய சக்திகளிடம் ஒப்படைத்து விட்டு "அப்பத்தை பங்கிடும் குரங்கின் முன்னால் காத்திருக்கும்" நிலைமை தோன்றியுள்ளது. இந்த நிலையிலிருந்து மீளாவிட்டால் தமிழீழ மக்களின் விடுதலை என்பது கனவாகவே போகும்.

## வெகுஜனங்களை அணிதிரட்டல்

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தில் அடக்கியொடுக்கப்படும் மக்களே பிரதான போராட்ட சக்தியாகும். புரட்சிகர தாபனமானது போராட்டத்தை முன்னெடுத்து வழிகாட்டி தலைமை கொடுக்கலாமேயன்றி மக்களுக்குப் பதிலாக போராட முடியாது. புரட்சிகர தாபனமானது மக்கள் மத்தியில் பிரச்சாரங்களை மேற்கொண்டு, அவர்களை தாபனமயப்படுத்தி; ஆயுதபாணிகளாக்கி அவர்களை புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவ உதவுவதே அதன் கடமை என்பதை உணர வேண்டும். இவ்வாறு தாபனமயப்படுத்தப்பட்ட மக்களை தமக்கிடையே எழும் பிரச்சனைகளை சரியான அரசியல் வழிகாட்டலில் தீர்த்துக் கொள்ள உதவ வேண்டும்.

இவ்வாறு அரசியல் அணிதிரட்டலை மேற்கொண்டு மக்கள் மத்தியில் பங்காற்றுகையிலேயே மக்களும் பலம் பெறுவதுடன் தாபனங்களும் மக்கள் மத்தியிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். தம்மை திருத்தியமைத்துக் கொள்ள முடியும்.

இதுவரை விடுதலைப் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவாக உள்ளார்கள் என்பது உண்மையே. ஆனால் இது போன்ற எழுச்சிகள் அரசியல் வேலைத்திட்டத்தினூடாக தாபனமயப் படுத்தாதவரை மிக நெருக்கடியான காலகட்டத்தில் நின்று பிடிக்க மாட்டாதது மாத்திரமல்ல எதிரியின் பக்கங்களைக் கூட சார்ந்த வரலாறுகள் நிறையவே உண்டு.

மக்களைப் பார்வையாளர்களாக இருக்க வேண்டாமெனவும் பங்காளிகளாக மாறும்படியும் அனைத்து இயக்கங்களும் அழைப்பு விடுத்த போதும் இது நடைமுறையில் தமக்கு நிதி, உணவு, மறைவிடம், சரீர உதவிகளைப் பெறுவது என்ற நோக்கத்துடனேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு மேல் தாபனமயப்படுத்தி தமது உரிமைகளுக்காகப் போராடவும் தமது அதிகாரங்களை கையிலெடுப்பவர்களாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் இதுவரையில் வைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல பொதுமக்கள் இன்று இயக்கங்களை விமர்சிப்பதற்கே பயப்படும் நிலைதான் உண்மையானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலமை நீடிக்கும் வரை வெகுஜனங்களை அணிதிரட்டுவதென்பது வெறும் கோசங்கள் என்ற அளவைத் தாண்டவே மாட்டாது. இதுவே வருங்காலத்தில் எமது போராட்டத்தை பாதிக்கப் போகும் பாரதூரமான அம்சமுமாகும்.

அப்பாவி மக்கள் தாக்கப்படுதல், தனியார் வீடுகளில் கொள்ளைகள், கடத்தி பணயம் வைக்கப்படுதல், மிகையான தண்டனை வழங்கல், அநாவசிய வாகனக்கடத்தல், லொறிகளில் கொள்ளை, அத்தியாவசிய சேவைகளின் பாதிப்பு, மக்களின் நலன்களை கருத்திற்கெடுக்காத நடவடிக்கைகள் போன்றவை எமது போராட்டத்தை இந்த இலக்கிலிருந்து இன்னும் இன்னும் விலகியே செல்லவைக்கும்.

## இயக்கங்களினுள் ஒருமைப்பாடும் ஐக்கிய முன்னணியும்

போராட்டத்தில் ஈடுபடும் போராளிகளை இணைக்கும் ஒரே அம்சம் அவர்களது போராடும் அரசியல் நோக்கே ஆகும். போராளிகளின் அரசியல் உணர்வை உயர்ந்த மட்டத்திற்கு வளர்த்து அதனூடாக மட்டுமே போரிடும் இயக்கத்தினுள் ஐக்கியத்தைப் பேணமுடியும். மாறாக இராணுவத்திற்கு அரசியல் இல்லை என்றான பின்பு வெறும் துப்பாக்கிகளால் ஐக்கியத்தைப் பேணமுடியாது. இந்த நிலையில் சமுதாயத்திலுள்ள அத்தனை குறைபாடுகளும் இயக்கங்களுள் வளர பிரச்சனைகளையும், சிக்கல்களையும் தோற்றுவிக்கின்றன. இயக்கத்தினுள் வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. அதிகாரப்போட்டிகளும், பிரதேச, சாதிய, மத உணர்வுகளும், பரஸ்பர சந்தேகமுமே வளர்கின்றன. படிப்படியாக இவை தாபனத்தின் உயிரோட்டத்தையே அரித்து உண்கின்றன.

இப்படிப்பட்ட நெருக்கடிகள் இன்று பல விடுதலை இயக்கங்களினுள்ளும் ஏற்பட்டு இரண்டாவது போர்முனையொன்றை தோற்றுவிக்கின்றன. இதனை தீர்ப்பதற்கு இன்றுள்ள விடுதலை இயக்கங்கள் பலவும் பல வேறுவகைப்பட்ட வழிமுறைகளைக் கையாள்கின்றன.

முதலாவதுவகை, அரசியல் உணர்வின்மையே பிரச்சனைகளுக்கான காரணம் என்பதற்கு பதிலாக சில உறுப்பினர்களிடையே இருக்கும் அற்ப சொற்ப அரசியல் அறிவே பிரச்சனைகளின் தோற்றுவாய் என தலைமைகள் கருதுகின்றன. இதனால் இராணுவத்திலுள்ளோர் அரசியல் புத்தகங்களை வாசிப்பது, அரசியலைப் பேசுவது, மூன்று பேருக்கு மேலாகக் கூடிப்பேசுவது, தாபனத்தையும் தலைமையையும் விமர்சிப்பது அனைத்துமே தண்டனைக்குரிய கடுமையான குற்றங்களாகின்றன; இயக்கத்தை உடைப்பதற்கான சதி முயற்சியாகவே கருதப்படும்.

இரண்டாவது வகை, இந்த முரண்பாடுகளை பலமான அடக்குமுறைகளால், சித்திரவதைகளால், கொலைகளால் அடக்கிவிட முனைந்து தமது இராணுவ முகாம்களையே சித்திரவதைக் கூடமாக மாற்ற முனைகிறார்கள். இது குறுகியகால நோக்கில் பயன் விளைவிப்பது போல இவர்களுக்குத் தோன்றினாலும் நீண்ட காலத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராளிகளின் போராட்ட உணர்வை அழித்து விடுவதுடன் மேலும் மேலும் மோசமான மோதல்களை ஏற்படுத்தி தாபனத்தை சிதைத்து விடும்.

மூன்றாவது வகை, இந்த முரண்பாடுகளை தோழர்களுடைய கவனத்தை திசை திருப்புவதன் மூலம் தணிக்க முயலுகின்றன. இராணுவத்திலுள்ள தோழர்களுக்கு அதிக சௌகரியங்களை வழங்குவது. இவற்றில் பிரதானமானது நிதி, வாகனங்கள், பொழுது போக்கு சாதனங்கள் போன்றவற்றையும், சிகரட், மது போன்றவற்றிலும் தாராளமாக இருப்பார்கள். அவர்கள் விடும் தவறுகளை கண்டித்து திருத்தாமல் விடுதல், அடிக்கடி இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற வழிமுறைகளாகும். இந்த வழிமுறைகளால் தாபனமானது தனது ஒழுக்க, கட்டுப்பாடுகளை படிப்படியாக இழந்து தாராளவாத நோயால் பீடிக்கப்டுகிறது; போர்க்குணாம்சம் படிப்படியாக மறைந்து நகர்ப்புறத்து இளைஞர்களின் இன்ப நாட்டத் தன்மை ஏற்படுகிறது. மக்களின் நலன்களைக் கருத்திற்கெடுக்காத மக்களுக்கு சுமையாக மாறும் போக்கு ஏற்படுகின்றது. இது போன்ற ஊதாரிச் செலவீனங்கள் மூலம் பல இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்யக்கூடிய பணம் விரயமாவது மட்டுமல்ல மக்களின் வெறுப்பிற்கு ஆளாவதுடன் நீண்டகாலத்திற்கு பொருளாதார ரீதியில் தாக்குப்பிடிக்க முடியாது போகவே மக்களின் சொத்துக்களைக் கொள்ளையிடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் உழைப்பில் ஈடுபடாத ஊழல் படிந்த சோம்பேறிக் கூட்டங்களாக, சமுதாய உழைப்பை அபகரித்து வாழ்பவர்களாக மாற்றி விடுகிறது இது போன்றதொரு இராணுவம் நீண்டகால ஈவிரக்கமற்ற யுத்தத்தில் நின்று பிடிக்கவோ, வெற்றி பெறவோ மாட்டாது.

1983 யூலைக்குப் பின்பு இயக்கங்களில் சேர்ந்து பயிற்சி பெற்ற பல போராளிகள் இன்று அந்தந்த தாபனங்களை விட்டு வெளியேறி விட்டார்கள் அல்லது தப்பி வெளிநாடு ஓடிவிட்டார்கள். பலர் சொந்த தாபனங்களாலேயே கொலை செய்யப்பட்டு விட்டார்கள். இன்னும் பலர் நீண்டகாலப் பயிற்சி என்ற பெயரில் இரண்டு வருடங்களுக்கு மேலாக பயிற்சி முகாம்களிலேயே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது முழுப் போராட்டத்திற்குமே இழப்பாகும். இதனை தடுத்து நிறுத்துவது எப்படி?

இராணுவத்தினுள் அரசியல் வேலை செய்தல்; அதன் மூலம் தோழர்களின் அரசியல் உணர்வு மட்டத்தை, போர்க்குணாம்சத்தை உயர்ந்த மட்டத்தில் பேணல்: போராளிகளுக்கு மூன்று ஜனநாயகம் எனப்படும் அரசியல், பொருளாதார, இராணுவ ஜனநாயக உரிமைகளை வழங்குதல்; சரியான அரசியல் வழிகாட்டலில் அவர்களது தவறுகளையும், இயக்கத்தின் தவறுகளையும், தலைமையின் தவறுகளையும் விமர்சன — சுயவிமர்சனம் மூலம் திருத்துதல்; அடித்தல், சித்திரவதைகள், கொலைகள்போன்றவற்றைமுற்றாக நிறுத்துதல்.

இதன் மூலம் போர்வீரர்களிடையேயும், வீரர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையிலும், தலைமைக்கும் இராணுவத்திற்கிடையிலும் பூரண ஒற்றுமையும், பரஸ்பர புரிந்துணர்வும் நிலவும் தனது சுய விருப்பம் ஒன்றின் பேரில் மட்டுமே அவன் இராணுவத்தில் இணைந்திருப்பதனால் அவனது உணர்வு பூர்வமான இயக்கப்பாத்திரம் அதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கரிக்கிறது. தன்னுடையதும், தனது சமூகத்தவரதும் நலன்களுக்காகவேதான் போராடுகிறேன் என்ற எண்ணம் அவனை பாரிய தியாகங்களுக்கு தயாரானவனாக மாற்றும். மக்களின் சக்தியை உணர்ந்த இவனிடம் அராஜகம் தோன்றாது சுயமாகவே மிக உயர்ந்த கட்டுப்பாட்டை பேணுவான். இதுவொன்றே மிக நீண்ட, ஈவிரக்கமற்ற யுத்தத்தில் இராணுவத்திலுள்ள அனைவரையும் ஒரு மனிதன் போல ஐக்கியப்பட்டு அனைத்து கஷ்டங்களையும் வெல்வதற்கான வழியாகும்.

தமது சொந்த தாபனங்களுள் ஐக்கியத்தைப் பேணமுடியாதவர்கள் ஏனைய தாபனங்களுடன் ஒரு காரியார்த்தமான ஐக்கியத்திற்கு வருவதென்பது சாத்தியமற்றதே. இயக்கங்களின் ஐக்கிய முன்னணி கூட இதே அடிப்படையிலேயே சாத்தியமாகும். பொது அரசியல் நோக்கத்தை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் பொதுவான வேலைத்திட்டத்தை உருவாக்கல்; ஏனைய தாபனங்களின் இருப்பையும் அவர்களது பங்களிப்பையும் அங்கீகரித்தல்; ஐக்கிய முன்னணியினுள் இயக்கங்களின் சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும் பேணல்; முரண்பாடுகளை பேச்சுவார்த்தைகள், விமர்சனம் - சுய விமர்சனம், பரஸ்பர விட்டுக்கொடுப்பு மூலம் தீர்த்து வைத்தல் என்பனவே செயலூக்கம் மிக்க பரந்துபட்ட ஐக்கிய முன்னணிக்கு வழிகாட்டும்.

## போராட்டமும் புதிய சமுதாயமும்

முதலாளித்துவ ஜனநாயகமென்பது அடிப்படையில் ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்வது. அதன் பலாத்காரத்தன்மையை மறைத்துக் கொண்டுள்ளது என்ற போதும் கூட அதில் சில ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதாகவே மக்கள் உணர்கிறார்கள். தாம் விரும்பும் கட்சிக்கு (அவை முதலாளித்துவ நலன் பேணும் கட்சிகள் தான் என்ற போதும் கூட) வாக்களித்து ஆட்சியில் அமர்த்துதல், அந்தக் கட்சியானது தான் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறும் பட்சத்தில் அடுத்த தேர்தலில் அதனைத் தூக்கியெறிந்துவிட்டு வேறோர் கட்சியை (இதுவும் முதலாளித்துவ நலன் பேணும் கட்சியே) ஆட்சிக்கு கொண்டுவரல் போன்றவையே இவையாகும்.

விடுதலையின் பின்பு, புரட்சியின் பின்பு தோற்றுவிக்கப்படும் மக்கள் ஜனநாயகம் என்பது போலி முதலாளித்துவ ஜனநாயகத்திலும் பார்க்க பன்மடங்கு உயர்வானது என்ற போதும் கூட வெகுஜனங்கள் இயக்கங்களால் வைக்கப்படும் சுலோகங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, அதன் தத்துவார்த்த விளக்கங்களை புரிந்து கொண்டு புதிய அமைப்பை வரவேற்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அவர்களுக்கு தெரியும் இப்போது எடுத்து வைக்கப்படும் அடியானது முதலாளித்துவ பாராளுமன்ற அர்த்தத்தில் மீண்டுவர முடியாத அடியென்பது; சோவியத் யூனியனில் கடந்த 68 வருடங்களாகவும், சீனாவில் கடந்த 36 வருடங்களாகவும் கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஒரே கட்சியே ஆட்சி அதிகாரத்தில் இருப்பதை அறிவார்கள். ஆகவே தமது வாக்குப் பலத்தால் கட்சியை மாற்ற முடியாத புதிய அமைப்பிற்கு செல்லு முன்பு அவ்வமைப்பு மிக உயர்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகம் கொண்டது தான் என உறுதி செய்து கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு நியாயமாகவே எழும். இந்த சந்தேகத்தை தீர்த்த பின்பே மாற்றத்தைக் கொண்டுவர முனையும் தாபனத்தை நம்பி தமதும் நம்முடைய சந்ததியினதும் வருங்காலத்தை ஒப்படைக்கத் தயாராவர். இதனை வெறுமனே சுலோகங்களினால் மழுங்கிவிட முடியாது. போராட்டக் காலத்திலேயே, போராட்டத்தினூடாகவே; போராட்டத் தாபனங்களின் நடைமுறையினூடாகவே அப்படிப்பட்ட ஓர் உயர்ந்த ஜனநாயகத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கிறோம் என்பதனை தாபனங்கள் நிரூபிக்க வேண்டியுள்ளது. அப்படி நிரூபிக்கும் பட்சத்திலேயே வெகுஜனங்கள் தமது தலைவிதியை அந்தத் தாபனத்திடம் ஒப்படைத்து அத்தாபனத்தில் அலை அலையாக அணிதிரள்வார்கள். இப்படிப்பட்டதொரு தாபனம் மட்டுமே மிகப் பரந்துபட்ட வெகுஜன அடித்தளத்தைப் பெறமுடியும்.

உயர்ந்த ஜனநாயக வடிவத்தை நோக்கிச்செல்லும் தாபனத்தின் நடவடிக்கைகள் தனது போராட்ட நடைமுறையிலே இரண்டு வகையில் வெளிப்படும்.

(1) இராணுவத்தினுள் உள்ள ஜனநாயகத் தன்மை.
(2) மக்களுடனான உறவில் அதுகாட்டும் மனிதநேயம்.

## இராணுவத்தினுள் உள்ள ஜனநாயகத் தன்மைகள்.

அடக்குமுறை இராணுவமானது ஆளும் வர்க்கத்தால் அல்லது ஆளும் கும்பலால் தனது சொந்த மக்களுக்கெதிராகவே தனது சொந்த மக்களை அடக்குவதற்காகப் பயன்படுத்தப்படுவதாகும். இந்த இராணுவத்திலுள்ள போர்வீரர்கள் அரசியல் உணர்வு பெறுவது மட்டுமல்ல இந்த இராணுவத்தில் ஜனநாயகத் தன்மைகள் காணப்படுவதே அதனை அடக்குமுறைச் சருவியாக செயல்படுவதினின்றும் தடுத்துவிடும். மாறாக மக்கள் இராணுவத்தில் அரசியல் உணர்வும், ஜனநாயகத்தன்மையும் போர்வீரர்களின் உணர்வு பூர்வமான இயக்கப்பாத்திரத்தை வலுவாக்கி, போர்வீரர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையில் ஒற்றுமையை வலுவாக்கி அதன் போரிடும் ஆற்றலை பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும். இராணுவத்தில் ஜனநாயகமானது ''மூன்று ஜனநாயகங்கள்'' என்னும் பெயரால் அழைக்கப்படும் அரசியல் ஜனநாயகம், பொருளாதார ஜனநாயகம், இராணுவ ஜனநாயகம் ஆகிய மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியதாகும்.

### அரசியல் ஜனநாயகம்

இராணுவத்தில் கீழணிகளின் ஜனநாயகத் தன்மை மிக்க கூட்டங்களையும், மகாநாடுகளையும் நடத்த வேண்டும். இதில் அரசியல் நிலைமைகள், தாபனத்தின் அரசியல் நிலைப்பாடுகள், தாக்குதல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலை, கல்வி, வாழ்க்கைப் பிரச்சனை போன்றவை பற்றி போர் வீரர்களும் அதிகாரிகளும் கலந்துரையாடுவார்கள். இக்கூட்டங்களில் அதிகாரிகள், போர்வீரர்கள் என்ற பேதமின்றி பரஸ்பரம் ஒருவரை ஒருவர் விமர்சிக்கும் உரிமையைப் பெறுவர். இதனால் இராணுவத்திலுள்ள தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு திருத்தப்படும். தவறான போர்வழிகள் அம்பலப்படுத்தப்படுவார்கள். சிறந்த ஊழியர்கள் முன்னுக்கு வருகிறார்கள்.

கீழ்மட்ட ஊழியர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்காக நபர்களை சிபார்சு செய்யும் உரிமையை கீழணியிலுள்ள வீரர்கள் பெறுவார்கள். கீழ்மட்ட ஊழியர்கள் மிகவும் பற்றாக்குறையாக இருக்கும்போது இம்முறை மிகவும் உபயோககரமானது, ஆயினும் இதுபொது விதியாக கருதப்படமாட்டாது.

## பொருளாதார ஜனநாயகம்

படையினரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு கம்பெனியின் சப்ளை, உணவு விடயங்களை நடாத்துவதில் கம்பெனித் தலைமைக்கு உதவி செய்யும் உரிமை இருக்கும் (ஆனால் அதனை மீறக்கூடாது.) இதன் மூலம் வீரர்களுக்கு ஓரளவு சிறந்த வாழ்க்கை வசதிகள் உத்தரவாதப்படுத்தப்படும். இராணுவத்தின் அனைத்து இன்ப துன்பங்களை அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் இடையில் புரிந்துணர்வும் ஒற்றுமையும் ஏற்படுகிறது.

## இராணுவ ஜனநாயகம்

பயிற்சிக் காலங்களில் அதிகாரிகளுக்கும் போர்வீரர்களுக்குமிடையில் பரஸ்பரம் போதனை முறை நிலவவேண்டும். போர்க்காலங்களில் போர்முனைகளில் சாத்தியமான போதெல்லாம் பல்வேறு விதமான சிறிய, பெரிய கூட்டங்களை நடத்த வேண்டும். இக்கூட்டங்களில் கம்பனித் தலைமையின் கீழ் எதிரியின் நிலைகளை எப்படித் தாக்கிக் கைப்பற்றுவது, ஏனைய போர்க் கடமைகளை நிறைவேற்றுவது என்பது போன்ற பிரச்சனைகளைப் பற்றி விவாதிப்பதற்கு போர் வீரர்களை தட்டியெழுப்பவேண்டும். போர் பல நாட்கள் நீடிக்கும் வேளையில் இத்தகைய பல கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும்.

இதன் மூலம் போர் வீரர்களின் முன் முயற்சியும், உற்சாகமும் அதிகரிக்கும்; சிறந்த இராணுவ நுட்பம், தந்திரோபாயங்கள் போன்றவற்றை அடைய இச் செயன் முறை பெரிதும் உதவும்.

இந்த ஜனநாயக முன்னெடுப்புக்கள் சரியான அரசியல் வழிகாட்டலின் கீழ், தலைமையின் மத்தியப்படுத்தலின் கீழ் அமைந்திருப்பது மிகவும் அவசியமானது. தவறும் பட்சத்தில் இது இராணு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வக் கட்டளைகளையே பேமர்சித்துக் கொண்டிருக்குமளவிற்கு, யுத்த நடவடிக்கைகளின் போது சர்ச்சைகளை ஏற்படுத்தி யுத்தத்தை தோல்விக்கு இட்டுச் செல்லுமளவிற்கு, யுத்தத்தில் அதிகாரிகள், போர்வீரர்கள் ஆகியோருக்கிடையிலான வேலைப்பிரிவினையையே மறுக்குமளவிற்கான அதீத ஜனநாயகமாக பிரள்வதற்கு வாய்ப்புண்டு. சரியான வழிகாட்டலின்மையே பொதுவாக இது போன்ற தவறுகளுக்கு காரணமாகிவிடுவதுண்டு என்ற போதிலும் இராணுவத்திலுள்ள தவறான போர்வழிகளும், சோபபேறிகளும் இந்த அதீத ஜனநாயக சுலோகங்களின் பின்னால் மறைந்து கொண்டு தமது சுயமைகளைத் தொடர வாய்ப்புண்டு. அதீத ஜனநாயகமானது இராணுவத்தை அதன் போராட்ட கடமைகளை செய்யமுடியாமல் செய்து புரட்சியை தோல்விக்கு இட்டுச் செல்லக் கூடியது ஆகவே இது போன்ற மோசமான தவறுகள் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு வழி ஜனநாயகத்தைத் மறுப்பதல்ல; அதனை தலைமையின் மத்தியப் படுத்தப்பட்ட வழிகாட்டலில் சரியான அரசியல் வழிகாட்டலில் முன்னெடுப்பதே ஆகும். புரட்சிகர இராணுவத்தில் ஊழியர்களது சுயவிருப்பத்திலான பங்களிப்பும், உணர்வு பூர்வமான இயக்கப்பாத்திரமுமே மிக அடிப்படையான அம்சங்களாகும். ஊழியர்கட்கு யுத்தத்தில் நீதியான தன்மையையும். அரசியல் நோக்கங்களையும் புரிய வைப்பதனால், இராணுவத்தினுள் ஜனநாயக முன்னெடுப்புகளை மேற்கொள்வதனால் இந்த அம்சங்களை தொடர்ந்து வளர்த்தெடுக்கலாம்.

இவ்வாறே ஒரு ஊழியன் எப்போது அந்த தாபனத்துடன் கருத்து முரண்படுகிறானோ; போர்வீரன் எப்பொழுது யுத்தத்தின் அரசியல் நோக்கோடு முரண்படுகிறானோ; எப்போது அதன் தாபன வேலைத்திட்டங்களுடன் கருத்து வேறுபாடு கொள்கிறானோ அப்போதே அவன் அந்த இராணுவத்திலிருந்து வெளியேறும் உரிமையைப் பெறுகின்றான். இது அவனது அடிப்படை ஜனநாயக உரிமையே. இந்த உரிமை மறுக்கப்பட்டு பலவந்தமாக இணைத்து வைக்கப்பட்டிருக்கையில் அவனது உணர்வு பூர்வமான இயக்கப்பாத்திரம் மறைந்து விடுகிறது. இதற்குமேல் இந்த இராணுவமானது கூலிப் பட்டாளத்தின் தன்மையை பெற்று விடுகின்றது.

தாபனத்துடன் கருத்து முரண்பட்டு, ஆனால் பலவந்தமாக இணைத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் இராணுவத்தில் மிக விரக்தியுற்றவர்களாகிறார்கள். இவர்களிடம் முன்பு காணப்பட்ட தன்னலமறுப்பு, உறுதியான கட்டுப்பாடு, போர்க்குணாம்சம் ஆகியன மறைந்து போகின்றன. இந்த வீரர்களிடையே காணப்படும் ஏனோதானோ என்ற மனப்பாங்கு அவர்களது அராஜக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பற்ற தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கும், இன்ப நாட்டப்போக்கிற்கும் வழிகாட்டுகிறது. தன்னுடைய நியாயமான உணர்வுகளுக்கு தன்னுடைய சொந்த தாபனமே மதிப்புக் கொடுக்காததை உணரும் அவன் சாதாரண மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க மாட்டான். இதுவே அவனது அராஜக நடவடிக்கைகளின் ஊற்று மூலமாகிறது. இப்படிப்பட்ட விரக்தியுள்ள ஊழியர்களை வைத்திருப்பதனால் ஒரு விடுதலை இராணுவம் தனது உறுதியான கட்டுப்பாடடையும், போர்க்குணாம்சத்தையும், வெல்லற்கரிய வீரத்தையும் பேண முடியாது சீரழிந்து போகிறது ஆகவே இப்படிப்பட்டவர்களை வெளியேற அனுமதிப்பதன் மூலம் அல்லது வெளியேற்றுவதன் மூலமே இராணுவமானது தனது புரட்சிகரத் தன்மையை பேண முடியும். விரக்தியுள்ள வீரர்களைக் கொண்டு புதிய நம்பிக்கை மிக்க சமுதாயத்தை படைக்கப் போவதாகக் கூறிக் கொள்வது 'ஆண்டிகள் மடம் கட்டிய' கதை போன்றதே.

தமிழர்கள் பிறக்கும் போதே இலங்கைப் பிரஜைகளாகவே பிறந்தார்கள். சுதந்திரத்தின் பின்பு 25 வருடங்கள் ஒற்றை ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டே வாக்களித்தார்கள். ஆயினும் சிங்கள பேரினவாதத்துடன் தொடர்ந்தும் இணைந்து வாழ முடியாது எனக் கருதும் பட்சத்தில் பிரிந்து சென்று தனிநாட்டை அமைக்க விரும்பினார்கள். இந்த சுயநிர்ணய உரிமையை சிறிலங்கா அரசு ஏற்றுக் கொள்ளாதது மட்டுமன்றி அடக்கவும் முனைந்தபோது தமிழீழப்போராட்டம் வெடிக்கிறது - இது அனைவருக்கும் விளங்கக் கூடிய விடயமே.

விடுதலை இயக்கத்தால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளையும், வேலைத்திட்டங்களையும் ஏற்றுக்கொண்டு அதில் சேரும் ஒருவன் அதன் வளர்ச்சிக்காகவும் வெற்றிக்காகவும் கடுமையாக உழைக்கிறான். சிறிது காலத்தில் முன்பு தன்னால் ஏற்றுக் கொள்ளபட்ட தாபனத்தின் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் தவறானவை என உணரும் பட்சத்தில் அல்லது தன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் தாபனமானது விசுவாசமாக முன்னெடுக்க வில்லையென்பதனை உணரும்போது அந்த ஊழியன் அந்த தாபனத்தை விட்டு வெளியேறவும் தொடர்ந்தும் புரட்சிக்கும் மக்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை வேறோர் தாபனத்தினூடாகவோ அல்லது புதிய அமைப்பினூடாகவோ முன்னெடுக்கிறான். இது அவனது அடிப்படை அரசியல் உரிமையாகும். ஆனால் இது புலருக்கு இன்னுமே புரியாது இருப்பது வருந்தத்தக்கதே.

ஊழியர்களின் இந்த அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுப்பதற்கு "இயக்கத்தில் பயிற்சி பெற்றவன்" "இயக்க இரகசியங்களை அறிந்தவன்" எனக் காரணம் காட்டுகிறார்கள். அவனுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பயிற்சி வழங்கியதை குறிப்பிடுபவர்கள் அவனது கடந்தகால உழைப்பால் இயக்கம் பெற்ற இலாபங்களை மறந்து விடுகிறார்கள். அவன் வெளியேறி விடுதலைக்காக வேறோர் அணியில் செயற்படுகிறான் என்பதையும் மறந்து விடுகிறார்கள். இரகசியங்களைப்பேணல் என்ற செயன்முறைகளின் பின்னால் சில இயக்கத்தலைமைகள் முன்வைத்த தமது புரட்சிகர கொள்கைகளை, வேலைத்திட்டங்களை விசுவாசமாக முன்னெடுக்காததையும், அத்தலைமையை விமர்சித்துத் திருத்த ஊழியர்களுக்கு வாய்ப்பளிக்காமையையும், அந்த தாபனம் புரட்சியை முன்னெடுக்காது* தடுத்து வைத்திருப்பதையும் இனங்காணத்தவறக் கூடாது. தமது மோசடிகளும், மக்கள் விரோத நடவடிக்கைகளும் அம்பலமாகாது தடுப்பதற்கும் இத்தகைய கட்டுப்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

* என உணர்ந்து ஊழியர்களை பலவந்தமாக

இந்த நடைமுறைகள் மாற்றியமைக்கப்படாதவரை விடுதலை இயக்கத் தலைமைகள் இழைக்கும் தவறுகள் திருத்தப்பட வாய்ப்புகள் ஏற்படமாட்டாது. இப்படிப் பாதிக்கப்பட்ட உணர்வுகளை உடைய இராணுவமானது ஈவிரக்கமற்ற கொடிய நீண்ட புரட்சிகர யுத்தத்தில் தியாகங்களுக்கும், அர்ப்பணிப்புக்களுக்குமூடாக தனது வீரஞ்செறிந்த போராட்டத்தை முன்னெடுக்காது.

இது போன்ற ஜனநாயக நடவடிக்கைகள் இராணுவத்தை உடைத்து சின்னாபின்னப்படுத்தி விடும் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் சீன மக்கள் விடுதலைச் சேனை 20 வருடத்திற்கு மேலாக உறுதியாகப் போராடியது புரட்சிகர யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் செஞ்சேனையில் 30 லட்சம் போர்வீரர்கள் இருந்தார்கள் இவ்வளவு பெரிய இராணுவத்தை இவ்வளவு நீண்டகாலத்திற்கு மிக்க கடுமையான போராட்டத்தினுள்ளே வைத்திருக்க முடிந்ததே இது போன்ற ஜனநாயக நடவடிக்கைகளாலேயே தான். தனது தாபனத்திற்குள் ஜனநாயகத்தைப் பேண முடியாத அமைப்புக்களால் விடுதலையின் பின்பு திடீரென ஜனநாயகத்தையும் மனித நேயத்தையும் கொண்டு வந்து விடமுடியும் என எதிர்பார்க்க முடியாது தானே.

மேலும் தாபனம் சிதைந்துவிடாதிருக்க, ஐக்கியத்தை காப்பதற்காக தாபனத்தை விட்டு வெளியேறும் உரிமை மறுப்பதென்பது ஒரு மாக்சியவாதி பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்காக தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதற்குச் சமமானது. தேசிய அடக்குமுறை இருக்கும்வரை அடக்கப்படும் இனத்தைச் சேர்ந்த பாட்டாளிவர்க்கம் அடக்கும் இனத்தைச்சேர்ந்த பாட்டாளிவர்க்கத்தை சந்தேகத்துடனேயே பார்க்கும்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடக்கப்படும் தேசிய இனத்தின் பிரிந்து செல்லும் உரிமையை ஏற்றுக் கொண்டு அதற்காகப் போராடுவதன் மூலமே அடக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் அடக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளிகளின் நம்பிக்கையைப் பெற முடியும். இதனாலேயே பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது நடைமுறைச் சாத்தியமாகும். ஆகவே தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்பது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் முன்நிபந்தனையாகிறது. அதாவது பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரிப்பதே சர்வதேச பாட்டாளிகளின் ஐக்கியத்திற்கு வழி வகுக்கும். இவ்வாறே இராணுவத்தினுள் வீரர்கள் பலவந்தமாக இணைக்கப் பட்டிருக்கும் வரை உண்மையான ஐக்கியம் ஏற்படமாட்டாது. அவர்களது வெளியேறும் உரிமையை ஏற்றுக் கொள்வதனால் மட்டுமே உணர்வு பூர்வமான காரியார்த்தமான ஐக்கியம் தோன்றும்.

## மக்களுடனான உறவுகள்

சீனச் செஞ்சேனை தான் முகாமிட்டிருக்கும் கிராமத்திலிருந்து வெளியேறும்போது அக்கிராமத்து மக்கள் கண்ணீர் வடிப்பார்கள். இந்தளவிறகு மக்களின் அன்பைப் பெற்றிருந்தார்கள் மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போரிடுவதுடன் நின்று விடாது மக்களின் அனைத்து துன்பங்களிலும் பங்கெடுத்துக் கொண்டார்கள். மக்களுக்கு உற்பத்தியில் உதவி புரிந்தார்கள், வெள்ளம் வரட்சி போன்ற துன்பங்களின் போது அவர்களை அவற்றிலிருந்து மீள்வதற்கு உதவினார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக இராணுவத்திலிருந்த கட்டுப்பாடுகள் மக்களுடனான உறவுகளை நல்ல முறையில் பேணுவதில் மிகுந்த பங்காற்றின. சீனச் செஞ்சேனையில் 'மூன்று பிரதான கட்டுப்பாடுகளும், கவனத்திற்குரிய எட்டம்சங்களும்' என இவை வழங்கப்பட்டலாயிற்று.

## மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகள்

(1) அனைத்து நடவடிக்கைகளிலும் கட்டளைக்குக் கீழ்ப்படி.
(2) மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ நூலையோ எடுக்காதே.
(3) கைப்பற்றிய எல்லாவற்றையும் வைத்திருக்காது ஒப்படை.

## கவனத்திற்குரிய எட்டம்சங்கள்

(1) மரியாதையாகப் பேசு.
(2) வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்து கொள்
(3) கடன் வாங்கியதை திருப்பிக் கொடு
(4) சேதங்களுக்கு நஷ்ட ஈடு செலுத்து
(5) மக்களை அடிக்கவோ நிந்திக்கவோ கூடாது
(6) பயிர்களை அழிக்காதே
(7) பெண்களிடம் ஒழுங்கீனமாக நடவாதே
(8) கைதிகளை துன்புறுத்தாதே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ் விதிகள் சில பிரதேசங்களில் குறிப்பான நிலைமைகளின் கீழ் அப்பிரதேச மக்களின் பண்பாடுகளைக் கருத்திற் கொண்டு "பெண்களின் கண்ணுக்குப் படும்படியான இடங்களில் குளியாதே" "கைதிகளின் சட்டைப் பைகளில் சோதனை போடாதே" என்பன போன்ற விதிகளும் கூட உள்ளடங்கியிருந்தன.

இன்று விடுதலைப் போராட்டத்தில் ஓங்கியுள்ள அராஜகங்களை பார்க்கும்போது எமது விடுதலை இயக்கங்கள் மக்களின் அன்பைப் பெறுவதற்கு எவ்வளவு உயர்ந்த கட்டுப்பாட்டை பேணவேண்டியுள்ளது என்பதை இலகுவாக உணரலாம். எமது போராட்டத்தின் போக்கிலேயே இது போன்ற உயர்ந்த அம்சங்கள் பரிணமிக்கின்றனவா என கூர்ந்து அவதானிப்பது ஒவ்வொரு போராளியினதும் கடமையாகும். எமது விடுதலைப் போராட்டமானது இனவாத அடக்குமுறைகளுக்கு எதிரானது என்ற ஒரே காரணத்தினால் முற்போக்கானதாக புரட்சிகரமானதாக இருந்துவிடும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் யூதர்களின் ஆரம்பகால சியோனிச நடவடிக்கைகள் கூட யூதருக்கு எதிரான அடக்குமுறைகளை முறியடிப்பதற்கான போராட்டமாகவே காட்டப்பட்டன. ஆனால் இன்று உலக பிற்போக்கு தளங்கள் அனைத்தினதும் வாரிசாக இஸ்ரேல் தொழிற்படுகிறது.

ஆகவே நாம் ஒரு உயர்ந்த, புதிய சமுதாயத்தை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றோமா என்பதனை உறுதி செய்து கொள்வது அவசியமானது. ஒரு இராணுவம் எந்தளவிற்கு மக்கள் இராணுவமாக தன்னை அமைத்துக் கொண்டுள்ளது என்பதனை அறிந்து கொள்ள இந்த விதிமுறைகள் சிறந்த உரைகல்லாகும். இப்படிப்பட்ட ஒரு இராணுவத்தை நம்பியே மக்கள் தமது எதிர்காலத்தை ஒப்படைக்கத் தயாராவார்கள். அப்படி இயக்கங்கள் தம்மை மாற்றியமைக்காத வரை "மக்களே பங்காளிகளாகுங்கள்" என்ற சுலோகம் வெறும் பிரச்சார சுலோகமாக மட்டுமே இருக்க முடியும்.

## போராட்டமும் பிரச்சாரமும்

புரட்சிகர போராட்டத்தில் தாபனங்களின் பிரச்சாரங்கள் அமைய வேண்டிய முறைகள் பற்றி கியூபாப் புரட்சித் தலைவர் சேகுவரா குறிப்பிடும் போது "உண்மையைக் கூறுவதே புரட்சிகர தாபனத்தின் பிரச்சாரத்தில் மிக அடிப்படை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யான விதியாகும். தனது கெரில்லாக் குழுக்களின் நடவடிக்கைகள் பற்றி மிகச் சரியான தகவல்களையே எப்பொழுதும் கொடுக்க வேண்டும்.. பெரிய பொய்களைக் கூறி செயற்கையான பிரமை களைக் கொடுப்பதைவிட சிறியதாயினும் உண்மைகளைக் கூறுவதே நீண்டகாலத்தில் பயனளிக்கக் கூடிய கொள்கையாகும்'' என்றார்.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் நடத்தப்படும் கெரில்லாத்தாக்குதல்களின் நன்மையான அம்சங்களில் ஒன்று அது மக்களுக்கு போராட்டத்தின்பால் நம்பிக்கை ஊட்டுவதே ஆகும். கெரில்லாத் தாக்குதல்களால் எதிரி இராணுவ வீரர்கள் கொல்லப் படுவதை, அல்லது பின்வாங்கி ஒடுவதைக் காணும் மக்கள் எதிரி இராணுவம் என்பது வெல்லப்பட முடியாதது அல்ல: நவீனரக வாக னங்களில் கம்பீரமாக வலம்வரும் அதிகாரிகள் கூட மிக எளிதாகசுட்டு விழ்த்தப்படக் கூடியவர்களே என்பதைக் காண்கிறார்கள். இது மக்க ளது நிராதரவான உணர்வுகளைத் தகர்த்து அவர்களை போராட் டத்தின் பால் நம்பிக்கையூட்டுகிறது. அணிதிரள உதவுகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நிலையில் நிகழ்த் தப்பட்ட மிக எளிய முறையிலான தாக்குதல்கள்கூட இந்தவிதமான சாதகமான அம்சங்களைக் கொண்டிருந்த போதும் அதில் ஈடுபட்ட போராளிகளால் தம்மை வீர புருஷர்களாக காட்டும் நோக்கில் அத் தாக்குதல் சம்பவங்களை பாரிய சாதனைகளாக காட்ட முனைந் தார்கள்; அல்லது சாதாரண மக்கள் அவற்றையிட்டு 'ஜேம்ஸ் பொன்ட்' பாணியிலான கதைகள் பேசுவதை தெரிந்தும் அனு மதித்தார்கள்: தமது நடவடிக்கைகள் மூலம் ஊக்குவித்தார்கள்.

ஆரம்பத்தில் நடத்தப்படும் எளிய விதத்திலான தாக்குதல் களின் வெற்றிகளைப் பற்றிய உண்மைகளை உள்ளபடியே மக்களுக் குக் கொடுப்பதே அந்த மக்களை ''எம்மாலும் செய்யலாம்'' என்ற நம்பிக்கையூட்டி அவர்களை போராடுமாறு தூண்டும். மறாக அந் தத் தாக்குதல்கள் பற்றி தவறான அல்லது மிகைப்படுத்தப்பட்ட புனைகதைபாணியிலான செய்திகளைக் கொடுத்தல் மக்களை கனவு காண்பவர்களாகவே வைத்திருக்கும். இத்தாக்குதலில் ஈடுபட்டவர் களை வீர புருஷர்களாகக் காட்டுவதானது மக்களை ஆயுதப் போ ராட்டமானது தமது சக்திக்கு மேற்பட்ட ''விசேட திறமை' பெற்ற வர்களது நடவடிக்கைகள் எனக் கருதுவதற்கு வழிவகுக்கும். இது அவர்களை போராட்டத்தில் பங்காளிகளாக மாற்றுவதற்குப்பதிலாக பார்வையாளர்களாகவே வைத்திருக்கும்.

இச்செயன் முறைகளால் மக்கள் போராளிகளைப் பற்றி அதீத மதிப்பீடுகளை கொள்ளச் செய்து போராளிகளை தியாகிகள், புனித மானவர்களாகக் கருதி சலுகையுடன் நடத்த வழிவகுப்பதால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராளிகள் அவற்றை ஊக்குவிக்கின்றார்கள். ஆனால் போராட்டம் வளர்ந்து உக்கிரமடையும் போது, மக்கள் பார்வையாளர்களாக விலகி நிற்கும் போது இதன் பாதகமான அம்சங்களை முகம் கொடுக்க நேரிடும். அத்துடன் தம்மைப் பற்றி இவ்வாறு உயர்ந்தவர்களாக கருத முனைபவர்கள் தமது கடமை மக்களுக்கு ஊழியம் செய்வதே என்பதை மறந்து மக்களது அதிகாரிகளாக மாற முனைகிறார்கள். இதுவும் போராளிகளை மக்களை விட்டு அந்நியப்படவே வழிவகுக்கும்.

போராட்டம் வளரும் காலத்தில் சில இயக்கங்கள் ஏனைய இயக்கங்களுடனான போட்டி காரணமாக தமது இயக்கப் பலத்தைப்பற்றி மிகையான மதிப்பீடுகளை வெளியிடுகிறார்கள் இதன் மூலம் மக்களின் மத்தியில் செல்வாக்கு செலுத்த முடியும் எனக் கருதுகிறார்கள். இயக்க அங்கத்தவர்களினதும், தமது இராணுவத்திலுள்ளோரினதும் எண்ணிக்கை பற்றி மிகையாகக் கூறல்; தமக்கு சர்வதேச ரீதியாக அதிகம் செல்வாக்கிருப்பதாகக் காட்ட முனைதல்; தமக்கு பிறநாடுகளிலிருந்து உதவிகள் கிடைக்க இருப்பதாகக் கூறல்; போன்றவை இந்த வகையில் அடங்கும். இவை கூட மக்கள் தமக்கு சுலபமாக விடுதலை கிடைக்குமெனக் கருதி தமது பங்களிப்பேதுமின்றியே விடுதலைக்கான நாட்களை எண்ணும் போக்கை தோற்றுவித்து விடுகின்றது. எமது போராட்டத்தில் இந்த வகையான பாதிப்பு மிக அதிகம் என்றே கூறவேண்டும் அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் தமக்கு வாக்களித்தால் தாம் தமிழீழத்தை எப்படியோ பெற்றுத் தருவோம் எனக் கூறியதற்கும் இன்று இயக்கங்களின் இந்தப் போக்கிக்கும் சாராம்சத்தில் அதிக வேறுபாடு கிடையாது. கசப்பானதாக இருப்பினும் உண்மைகளை, மக்களை முகம் கொடுக்க வைப்பதே அவர்கள் போராட்டத்தின் கஷ்ட நஷ்டங்களை புரிந்து கொண்டு படிப்பினை பெறவும், அவற்றை ஈடுசெய்யுமுகமாக தமது பங்களிப்பை வழங்குவது பற்றி அவர்கள் சிந்திக்கவும் வழி வகுக்கும். சர்வதேச முரண்பாடுகளுக்கு தமிழீழ போராடடம் அடகு வைக்கப்படும் இன்றைய ஆபத்தான நிலையிலும் கூட உண்மைகளை மூடி மறைப்பது மிக மிக ஆபத்தானது. நாளை இயக்கங்கள் மோசமான ஒடுக்குமுறைகளை, கஷ்டங்களை முகம் கொடுக்க நேர்டும் போது மக்களால் கைவிடப்படக் கூடிய ஆபத்தான நிலைமை ஏற்படும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் போராட்டமானது மிகக்கடினமான தடைகளைத் தாண்டியே செல்ல வேண்டியுள்ளது. இதில் பல இழப்புக்களுக்கும் தோல்விகளுக்கும் முகம் கொடுக்க நேர்வது தவிர்க்கப்பட முடியாததே இந்த இழப்புக்களையும் மீறி விடா முயற்சியுடன் போரிடுவதிலேயே இறுதி வெற்றி தங்கியுள்ளது. தமிழீழப் போராட்டமும் இன்று பல இழப்புக்களுக்கும் தோல்விகளுக்கும் மத்தியிலேயே முன்னேறிச் செல்கின்றது. ஆனால் சில இயக்கங்கள் போராட்டத்தில் தமக்கு ஏற்படும் இழப்புக்களை மக்களுக்கு மறைக்க முயலுகிறார்கள். தோல்வியில் முடிவடைந்த தாக்குதல்களை வெற்றியானதாக பொய் கூறுகிறார்கள். தாக்குதல்களில் கொல்லப்பட்ட தமது தோழர்களின் எண்ணிக்கையை குறைத்தும், கொல்லப்பட்ட எதிரிவீரர்களின் எண்ணிக்கையை மிகைப்படுத்தியும் கூறல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பொறுப்பற்ற விதத்தில் மக்கள் நலன்களுக்கு விரோதமான தாக்குதல்கள், கடத்தல்கள், கொள்ளைகள், கொலைகள் போன்ற விடுதலைக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடுதல், மக்களது எதிர்ப்பைக் கண்டதும் ஒரு மறுப்பறிக்கையை விடுவதன் மூலம் தமக்கு இதில் சம்பந்தமில்லை எனக் காட்ட முனைதல், இது இன்னொரு வகை. இந்தப் பொய்கள் சிறிது காலத்தின் பின்பு மக்களுக்குத் தெளிவாகும் பொழுது மக்கள் இயக்கங்களின் சரியான கூற்றுக்களைக்கூட நம்பமறுக்கிறார்கள். இன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ''லங்கா புவத்', அறிக்கைக்கும் விடுதலை இயக்க அறிக்கைகளுக்குமிடையில் அதிக வேறுபாட்டை காணமுடிவதில்லை. இது மக்களை மேலும் குழப்பத்தில ஆழ்த்தி நம்பிக்கையிழக்கவே செய்யும.

இவ்வறிக்கையின் தன்மைகளை காணும் தமிழ் மக்கள் சர்வதேச ரீதியில் வெற்றி பெற்ற ரஷ்ய, சீன, கியூபா, வியட்நாம் போராட்டங்களையும் இன்று வெற்றிகரமாக முன்னேறிவரும் எல்சல்வடோர் பேரு, பலஸ்தீன போராட்டங்களைப்பற்றிக்கூட சந்தேகப்படுமளவிற்கு நிலைமை சென்றுள்ளது. அந்தப் போராட்டங்கள் கூட வெறும் அறிக்கைப் போராட்டங்கள் தானோ என கேள்வியெழுப்ப முனைகிறார்கள் என்றால் இந்த பொய்ப் பிரச்சாரத்தின் தாக்கம் எந்தளவிற்கு ஏற்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ளலாம்.

மக்களுக்காக, மக்களின் விமோசனத்திற்காகவே போராடுவதாகக் கூறிக்கொள்ளும் போராளிகள் அந்த மக்களுக்கே ஏன் பொய் சொல்ல வேண்டும் தமக்கு ஏற்படும் தோல்விகளைக் கூறினால் மக்கள் தம்மைக் கைவிட்டு விடுவார்கள் என அஞ்சத்தேவையில்லை. தமக்கு உண்மையாக நடந்து கொள்ளும் விடுதலை இயக்கங்களுக்கே மக்களும் உண்மையாக நடப்பார்கள்: நேசிப்பார்கள். போராட்டத்தின் வெற்றிக்காக தமது பங்களிப்பை வழங்க முன்வருவார்கள். தமது விமோசனத்திற்காக நடத்தப்படும்போது போராட்டத்தி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லுள்ள குறைபாடுகளை காணும் மக்கள் அந்த குறைபாடுகளை களைய அவ முனைவார்கள். தமது பங்களிப்பு மூலம் அக்குறைபாடுகளை ஈடு செய்யவே முனைவார்கள். ஆகவே பிரச்சாரத்தை பொறுத்தவரை குறுகிய கால போலியான ''கௌரவத்திற்காக'' நீண்டகாலத்தில் ஊறு விளைவிக்கும் இது போன்ற ப்ரச்சாரங்களை நிறுத்துவதே மக்களை பங்காளிகளாக்குவதற்கு ஒரே வழியாகும்.

மறைந்த விடுதலைப் போராளியொருவருக்கு அஞ்சலி செய்யும் போது தவறான முறைகள் கடைப் பிடிக்கப்படுகின்றன. மறைந்த தோழனைப் பற்றிக் கூறும்போது அவனது பலம் பலவீனம் போன்றவற்றை ஒரு விமர்சன நிலையில் அணுகுவதே மக்களுக்கும், சக போராளிகளுக்கும் அப் போராளியின் வாழ்விலிருந்து படிப்பினை பெறவும், அவனது நல்ல அம்சங்களை பின்பற்றவும் உதவும். ஆனால் அவனது திறமைகளை குறிப்பிடுவதாக, கௌரவிப்பதாக கருதிக் கொண்டு அவனை மக்களின் சக்திக்கு அப்பாற்பட்ட வீர புருஷனாக சித்தரிக்க முயல்வது தவறானது.

இவ்வாறு பல வேறுபட்ட செயன்முறைகளால் விடுதலை இயக்கங்கள் தாமாகவே மக்களை விட உயர்ந்தவர்களாக காட்டமுனைந்து மக்களிடமிருந்து அந்நியப்பட்டுவிட்டு, மக்களே பங்காளிகளாகுங்கள் எனக் கோருவதில் பயனேதும் விளையப்போவதில்லை.

எப்படியாவது செல்வாக்கைப் பெற்றுவிட வேண்டும் என்ற ஆவலில் பல குறுக்கு வழிகள் இன்று கையாளப்படுகின்றன. ஒரு இயக்கம் ஏனைய சக இயக்கங்களைப் பற்றி அரசியல் ரீதியான விமர்சனங்களாக அல்லாமல் — அவதூறான கருத்துக்களை மக்கள் மத்தியிலும், ஏனைய சர்வதேச நாடுகளின் மத்தியிலும் முன்வைக்கின்றார்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்க குறும் பார்வையுடைய நடவடிக்கையாகும். இப்படி ஒவ்வொரு இயக்கமும் பரஸ்பரம் செய்ய முயலும் போது அனைத்து இயக்கங்களைப் பற்றியுமே அவதூறுகளை அனைவரும் சேர்ந்தே பரப்புகிறார்கள் என்பதைக் காணத்தவறுகிறார்கள்.

பிரச்சாரயுக்திகளில் இயக்கங்கள் செய்யும் மோசடியான, வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம் தம்முடைய கருத்துக்களை தமது தாபனப் பெயரில் வெளியிடுவதற்கு துணிச்சலற்று பொதுமக்கள், விடுதலை விரும்பிகள் இளைஞர்கள் — — — — இது போன்ற பெயர்களில் வெளியிடுவதாகும். இது போன்ற நடவடிக்கைகளால் வெகுஜனங்கள் தமது கருத்துக்களை பகிரங்கமாக வெளியிடக்கூடிய வாய்ப்புக்களை, இயக்கங்கள் அபகரிப்பதாகவே அர்த்தப்படும். அத்துடன் இயக்கங்கள் அந்த கருத்துக்களை தமது தாபனப்பெயரில் கூறினால் மக்கள் நம்பமாட்டார்கள் என்பதை புரிந்து கொண்டதன் விளைவே இப்படிப்பட்ட நடவடிக்கைகளாகும். ஆனால் எமது மக்கள் இது போன்ற ''அநாதை'' பிரசுரங்களையும்' சுவரொட்டிகளையும் கூட இனம் காணத் தவறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களை படிப்படியாக நடைமுறை உண்மைகளுக்கூடாக வென்றெடுத்து அவர்களை தாபனமயப் படுத்தி போராட்டத்தை முன்னெடுப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படும். மக்களின் சக்தியில் நம்பிக்கையுள்ளவர்களால் மட்டுமே இதனை சாதிக்க முடியும். மக்கள் சக்தியில் நம்பிக்கையற்ற, பொறுமையும் கடினஉழைப்பில் ஈடுபாடுமற்ற குட்டிமுதலாளித்துவ சக்திகளே எப்படியும் குறுக்குவழியிலாவது தமது இலக்கை அடைந்துவிட முயலுவர். இந்த குட்டி முதலாளித்துவ அனுகுமுறைகளின் விளைவே நாம் மேலே கூறிய தவறான அம்சங்களாகும்.

உண்மைகள் கசப்பானவை, ஆனல் அவற்றிலிருந்து படிப்படியாக படிப்பினை பெற்று மக்கள் தெளிவடைந்து உறுதியடைவார்கள். கவர்ச்சிகரமான பொய்கள் மக்கள் மனதில் மாயதோற்றங்களையும், வெறும் கனவுகளையும் தோற்றுவிக்கும். ஒருநாள் அந்தக் கனவுகள் கலையும் போது ஏமாற்றமும் விரக்தியுமே மிஞ்சும். போராளிகள் மக்களுக்கு விசுவாசமாக இருக்காதவரை மக்களும் போராளிகளை நம்பமாட்டார்கள் என்பதை உணர்ந்து இந்த குட்டி முதலாளித்துவ ஏமாற்று வித்தைகளை கைவிட்டு மக்களுக்கு உண்மையாக இருப்பதன் மூலமே பிரச்சாரம் விடுதலைப் போராட்டத்தில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும்.

## சமரசங்கள் பற்றி

அரசியலின் நீடிப்பே யுத்தமென்பது குறிப்பிட்ட சமுதாயத்தினுள் தோன்றிவளர்ந்த முரண்பாடுகளின் காரணமாகவே யுத்தங்கள் தோன்றுகின்றன. அதாவது குறிப்பிட்ட பொருளாதாய நலன்களின் போராட்டமே யுத்தமாகும். இந்த இலட்சியங்கள் அடையப்படும்போது மட்டுமே யுத்தம் முடிவுக்கு வரும். அந்த இலட்சியங்களை அடைவதற்கு முன்பாக ஏதாவது ஒரு காரணத்தால் சமரசம் ஏற்படுமானல் அந்த அடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்படாதவரை அந்த சமரசங்கள் முறிக்கப்படுவதும் மீண்டும் யுத்தம் வெடிப்பதும் தவிர்க்க முடியாதது. முரண்பாட்டின் அடிப்படைக் குணாம்சங்கள் மாறும்போது மட்டுமே யுத்தமானது முடிவுக்குக் கொண்டுவரப்படும். எப்படி யுத்தமானது அடிப்படை முரண்பாடுகளின் வளர்ச்சியால் உருவாக்கப்படுகிறதோ அவ்வாறே சமாதானமும் தனிமனிதர்களின் விருப்பு வெறுப்புக்களால் அல்லாமல் முரண்பாடுகள் தீர்க்கப்படும் போது மட்டுமே சாத்தியமாகும்.

எமது போராட்டத்தை எடுத்து நோக்கினல் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், நிலமின்மை, கல்விவாய்ப்பின்மை, மோசமான சுரண்டல், அடக்குமுறைச்சட்டங்கள் இவற்றால் பாதிப்புற்ற சிங்கள மக்களின் போராட்டங்களை இனவாதத்தால் திசைதிருப்பி விட்டு தமிழ்மக்களை அழித்தொழிக்க முனைந்துள்ள சிறீலங்கா அரசு ஒருபுறம், அனைத்து அடக்குமுறைகளையும் தூக்கியெறிய தமது சந்ததியின் வருங்காலத்தைக் காக்கப் போராடும் தமிழ்மக்கள் மறுபுறம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள மக்களின் போராட்டத்தைத் திசைதிருப்புவதால் மட்டுமே சிங்கள ஆளும் வர்க்கங்கள் தர்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் ஆகலால் சிங்கள இனவாதமானது சிறிலங்கா அரசால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாதது. இவ்வாறு போராடுவதனால் மட்டுமே தமிழினம் தனது வருங்காலத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

ஆகவே இந்த முரண்பாடு யுத்தத்தினால் மட்டுமே தீர்க்கப்பட முடியும் யுத்தத்தில் சிறிலங்கா அரசு தோற்கடிக்கப்பட்டு சுதந்திர சமதர்ம தமிழீழம் அமைக்கப்படுவதால் மட்டுமே தமிழ் மக்கள் இனவாத அழிவிலிருந்தும், சுரண்டலிருந்தும் காக்கப்படுவார்கள். அதே சமயம் சிங்கள மக்களை சிறிலங்காவில் உள்ள ஆளும் கும்பல முகம் கொடுக்க நேரிடும். அவர்களது போராட்டம் தென்னிலங்கையில் சிங்கள மக்களது விடுதலைக்கு வழிவகுக்கும்.

நவ காலனித்துவ நாடான இலங்கையில் ஏகாதிபத்தியத்தின் நலன்கள் பாதிக்கப்படாத அளவிற்கு நிலைமையை "சுமுகமாக" வைத்திருக்க வேண்டிய தேவை சிறிலங்கா அரசிற்குள்ளது. அத்துடன் உயர்ந்து வரும் இராணுவ செலவினங்களை ஈடுசெய்ய முடியாதவையாக உள்ளன. இன்றைய தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பாராளுமன்ற முதலாளித்துவ தலைமைகள், இப் போராட்டம் தொடர்ந்து நீடிப்பதனால் தலைமை தமது கையை விட்டுப் போய்விடும் எனப் பயப்படுகின்றனர். அத்துடன் விடுதலை இயக்கங்களைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ தலைமைகளின் நீண்ட யுத்தத்தில் நின்று பிடிக்க முடியாத ஊசலாட்ட தன்மையும், எந்த வழியிலாவது தாம் தாம் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்கின்ற பதவி வேட்டைத் தன்மைகளுமே இன்றைய சமரசத்தின் சமூக வேர்கள். ஆனால் அடிப்படை முரண்பாடுகள் அப்படியே இருக்கும் வரை இந்த முயற்சிகள் கைகூடமாட்டாது.

இந்த முரண்பாடுகளின் விளைவாக தோன்றிய யுத்தம் முரண்பாட்டின் அடிப்படைகள் மாறாதவரை முடிவுக்கு வராது. ஏதாவது சில காரணங்களால் ஒரு இடைக்கால சமரசம் ஏற்பட்டாலும், அது தற்காலிகமானதும் நிச்சயமற்றதுமாகும். இந்த முரண்பாடுகள் நிலவும் வரை இந்த சமாதானங்கள் முறிவதும் யுத்தங்கள் திடீரென வெடிப்பதும் தவிர்க்கப்பட முடியாததே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முடிவுரை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியற் தன்மை, இப் போராட்டத்தை முன்னெடுக்கும் இராணுவத்திற்கு அரசியலின் தேவை போன்றவற்றின் அடிப்படையில் இன்று எமது போராட்டத்தில் தோன்றியுள்ள அராஜக நிலைமைகளையும், தவறான போக்குகளையும் ஒரு விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்க முனைந்துள்ளோம். எமது போராட்டத்திலுள்ள அனைத்துத் தவறான அம்சங்களும் இக்கட்டுரையில் கூறப்பட்டுவிட்டதாக அர்த்தமாகாது. இன்னும் பல பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கிறது: புதிது புதிதாக தோன்றவே செய்கின்றன. ஆனால் அவைகூட இந்த நோக்கில் அணுகும் போது தீர்வு காண முடியாதவை அல்ல.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது கடினமானதாக, மிக நீண்டதாக அமைவது தவிர்க்கப்பட முடியாதது. யாராவது மிக இலகுவாக மிக விரைவில் அடைந்துவிடலாம் என்று கூறுவார்களேயானால் அவர்கள் கனவு காண்பவர்கள் அல்லது மோசடியாளர்கள் என்பதை இனம் காணத் தவறக்கூடாது. நீண்டதும், கடினமானதும் விடாப்பிடியுமான ஒரு போராட்டத்தின் மூலம் பாரிய தியாகங்களுக்கும், அர்ப்பணிப்புகளுக்கும் மத்தியிலேயே அந்த இலட்சியத்தை அடையமுடியும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தோன்றியுள்ள தவறான போக்குகளை களைவது என்பதுகூட இலகுவானதல்ல நீண்டதும் கடினமானதுமான ஒரு போராட்டத்தினூடாகவே அவை களையப்பட முடியும். அந்த வழியின் ஆரம்ப நடவடிக்கையாக இந்த தவறான போக்குகள் பற்றி ஒரு ஆரோக்கியமான விவாதத்தை தோற்றுவிக்க முடியுமாயின் அதுவே இக் கட்டுரையின் பயனெனக் கருதுகிறோம்.

சரியான கருத்துக்களை உருவாக்குவதென்பது சரியான பாதைக்கு இட்டுச் செல்வதன் ஒரு அம்சம் மட்டுமே. ஒருக்கால் சரியான கருத்தோன்று உருவாக்கப்பட்ட பின்பு அக் கருத்துக்களின் அடிப்படையில் தமது தவறான நடைமுறைகளை மாற்றியமைப்பதென்பது விடுதலை இயக்கத் தலைமைகளின் வர்க்க நலன்களையும் உள்ளடக்கிய ஒரு அம்சமே.

எமது போராட்டத்தில், போராட்ட நடவடிக்கைகளில் அரசியற் தன்மையை மறந்துவிட்ட இன்றைய நிலையில் போராட்டத்தின் அரசியற் தன்மை பற்றியும், போராளிகளுக்கும், வெகுஜனங்களுக்கும் இருக்கவேண்டிய அரசியற் பார்வை பற்றியும் வலியுறுத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வது அவசியமாகிறது. இப்படிக் கூறிவிடுவதால் போராளிகள் அரசியற் பார்வையை பெற்று விடுவதால் மாத்திரம் இன்றைய நெருக்கடிகள் அனைத்தும் உடனடியாக தீர்ந்துவிடும் என அர்த்தப்படாது.

வரலாற்றில் இதுவரை தோன்றிய வர்க்கங்கள் அனைத்திலும் பாட்டாளி வர்க்கமே புரட்சிகரமானது. சமுதாயத்தில் நிலவும் எந்த ஒடுக்குமுறையும் இந்த வர்க்கத்தை பாதிக்கும் ஆதலால் அனைத்து ஒடுக்குமுறைகளும் ஒழிக்கப்பட்ட சமுதாயமே இதன் இலட்சியமாகும். ஏனைய வர்க்கங்கள் (முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ வர்க்கங்கள்) பாட்டாளி வர்க்கத்தை விட மேல்தட்டுகளில் இருப்பதால் அவை தமக்கு மேல் நிலைக்கப்பால் ஒடுக்குமுறைகளுக்கெதிராக போராடும் அதே சமயம் தாம் தமக்கு கீழுள்ள வர்க்கங்கள் மீது ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விடவும் தயங்குவதில்லை. ஏனெனில் இவ் ஒடுக்குமுறைகள் மூலம் இவ்வர்க்கங்கள் இலாபமடைகின்றன. ஆகவே பாட்டாளிவர்க்க சித்தாந்தம் மட்டுமே சகல அடக்குமுறைகளையும் தகர்க்க வல்லது.

போராளிகள் அரசியல் பார்வையை பெறுதல் எனும்போது அப் போராளிகளும், விடுதலை இயக்கங்களும் எந்த வர்க்க அரசியலை சுவீகரித்துக் கொள்கின்றன என்பதையும் பொறுத்தே இன்றைய நெருக்கடிகளின் தீர்வு அமைந்திருக்கும்.

தமிழீழ போராட்டமானது ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகும். இதில் பல்வேறு வர்க்கங்களும் ஈடுபடுகின்றன. அத்துடன் விடுதலை இயக்கங்களில் உள்ள பலர் இளைஞர்களாகவும், நேரடியான உற்பத்தி உறவுகள் எதையும் கொண்டிருக்காதவர்களாயும் போராளிகளின் வர்க்கப் பின்னணிகளையும், இன்று இயக்கங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளின் வர்க்க முரண்பாட்டின் அம்சங்கள் பொதிந்திருப்பதையும் இனம் காண்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

இவற்றை இனம் காண்பதில் கஷ்டங்கள் இருக்கின்றன என்பதற்காக இப் போராட்டத்திலுள் வர்க்க முரண்பாட்டு அம்சங்களோ, சமூகத்தில் நிகழும் வர்க்கப் போராட்டத்தின் பிரதிபலிப்பாக விடுதலை இயக்கங்களினுள் வர்க்க நலன்களின் மோதல்களோ இல்லை என அர்த்தப் படமாட்டாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலை இயக்கங்களிலுள்ளோரின் சமூகக் கண்ணோட்டமா
னது அவர்களது வர்க்க நிலைகளை காட்டி நிற்கிறது. குறிப்பிட்ட
ஒரு விடுதலை இயக்கத்திலுள்ள போராளிகளின் வேறுபட்ட சமூகக்
கண்ணோட்டங்கள் முட்டி மோதுகின்றன. இவை புற உலகில் நிக
ழும் வர்க்கப் போராட்டங்களின் பிரதிபலிப்புகளே. விடுதலை இயக்
கங்களினுள் பாட்டாளி வர்க்க விரோதக் கண்ணோட்டமானது தலை
மை வழிபாடு, பதவிவேட்டை, அராஜகம், ஜனநாயக மறுப்பு, அதி
காரத்துவம், சர்வாதிகாரம், துரோகத்தனம், சந்தர்ப்பவாதம், சம
ரசவாதம், இன்பநாட்டவாதம், சித்திரவதைகள், படுகொலைகள்
என தன்னை வெளிப்படுத்துகிறது. இதற்கு மாறாக பாட்டாளி
வர்க்கக் கண்ணோட்டமானது அரசியலினூடாக பிரச்சனைகளுக்குத்
தீர்வு காணல், உருக்குப் போன்ற கட்டுப்பாடு, எளிமை, தியாகத்
திற்கு அஞ்சாமை, சமரசம் செய்யாத போர்க்குணாம்சம், விமர்ச
னம்—சுயவிமர்சனம், உட்கட்சிப் போராட்டம் மூலம் தொடர்ச்சி
யாக தாபனத்தை தவறுகளிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற நட
வடிக்கைகளினூடாக வெளிப்படுகிறது இம்முரண்பட்ட போக்குகள்
தாபனத்தினுள் அடிக்கடி முட்டி மோதிக் கொள்கின்றன. இம்முரண்
பட்ட போக்குகள் நீக்கப்பட்டு பாட்டாளி வர்க்க குணாம்சங்களை
விடுதலைப் போராளிகள் சுவீகரித்துக் கொள்ளும் போது மட்டுமே
இவ்வியக்கங்களாக மாறும்.

தமிழீழத்தில் இதுவரை ஒரு முழுமையான சமூக ஆய்வு மேற்
கொள்ளப்படாதது வருத்தத்தக்க விடயமாகும். இன்றைய தமிழீழ
விடுதலைப் போராட்ட சூழலில் தமிழ் சமூகத்தின் வர்க்கத் தன்மை
கள், அவற்றின் புரட்சிகர எதிர்ப்புரட்சிகர அம்சங்கள், போராட்
டத்தில் ஈடுபட்டுள்ளோரின் வர்க்கக் குணாம்சங்கள், போராட்டத்
தில் அதன் பாதிப்புகள் போன்றவை இன்னும் ஆழமான ஆய்விற்
குட்பட வேண்டிய விடயங்களாகும். ஆனால் எமது போராட்டத்
தின் அரசியற்தன்மை, போராட்டம் அரசியற் கண்ணோட்டத்துட
னேயே முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் ஆகியவற்றை
வலியுறுத்துவது மேற்கூறப்பட்டவை எல்லாவற்றிற்கும் முன் நிபந்த
னையாகிறது. அந்த நோக்கத்திலேயே இக்கட்டுரை வரையப்பட்
டது. அத்துடன் இக்கட்டுரை சென்றடைய வேண்டிய வெகுஜனங்
களின் கருத்தியல் மட்டங்களையும், அவர்கள் முன் அவசரமாக
நிலைநாட்டப்பட வேண்டிய விடயங்களையும் கருத்திற் கெடுத்தே
இதனை படைத்துள்ளோம். இன்னும் ஆழமாக ஆராயப்பட வேண்
டிய, விரித்துக் கூறப்பட வேண்டிய பல விடயங்கள் இருக்கவே
செய்கின்றன. அவற்றை வருங்காலத்தில் முன்வைப்போம். ◉



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியலும் இராணுவமும்



சரியான அரசியல் மார்க்கமும் இராணுவ மார்க்கமும் தன்னியல்பாகவும் அமைதியாகவும் தோன்றுவதில்லை என்பதையும் அவை போராட்டப் போக்கிலேயே தோன்றுகின்றன என்பதையும் வரலாறு நமக்கு கூறுகிறது. இந்த மார்க்கங்கள் ஒருபுறம் இடது சந்தர்ப்பவாதத்தையும், மறுபுறம் வலது சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும். புரட்சிக்கும் புரட்சிகர போருக்கும் சேதம் விளைவிக்கின்ற இந்த இரட்டையான போக்குகளை எதிர்த்து போரிட்டு அவற்றை வெல்லாவிட்டால் சரியான மார்க்கத்தை நிறுவுவதும் இப்போரில் வெற்றியை ஈட்டுவதும் சாத்தியமில்லை.

தீப்பொறி வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்